


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

முரசொலி

Murasoli

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 21 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 13 – புதன்கிழமை 30 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 21: Thiruvalluvar Year - 2054 - Aavani 13 - Wednesday 30 August 2023 - Kovai ★★ 10 Pages ₹5.00


# இலட்சியப் பயணம் தொடரும்; வெற்றிகள் நிச்சயம் குவியும்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

தமிழ்நாட்டு மக்கள் அளித்துள்ள முதலமைச்சர் என்ற பொறுப்பின் அடிப்படையிலும், உடன்பிறப்புகளாம் நீங்கள் அளித்த கழகத் தலைவர் என்ற பொறுப்பினை சுமந்தும் காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த 4 நாட்களாகப் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு, மக்கள் காட்டிய அன்பையும் கழகத்தினர் அளித்த வரவேற்பையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு சென்னை திரும்பியிருக்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் டெல்டா மாவட்டங்களுக்கு அடிக்கடி சென்று வந்திருந்தாலும், இந்த முறை 4 நாட்கள் தொடர்ச்சியான பயணம் என்றபோது, சொந்த ஊருக்குச் செல்லும் குழந்தையின் குதூகல மனநிலையுடன்தான் புறப்பட்டேன்.

நமது திராவிட மாடல் அரசு அறிவித்த திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் ஆய்வுப் பணிகள், திருமண நிகழ்வுகள், ஆதீனகர்த்தருடன் சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் உங்களில் ஒருவனான நான் பங்கேற்றதைச் செய்திகள் வாயிலாகப் பலரும் அறிந்திருப்பீர்கள். **இந்தப் பயணத்தில் மிக முக்கியமான நிகழ்வு என்பது, அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட’ விரிவாக்கமாகும்.**

**கடந்த ஆண்டு செப்டம்பர் 15 அன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாளில் மதுரையில் இதனைத் தொடங்கி வைத்தேன். அதனைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்து, 30 ஆயிரம் பள்ளிகளில் 17 இலட்சம் மாணவ - மாணவியர் பயன்பெறும் வகையில் ஆகஸ்ட் 25-ஆம் நாள் மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் அவரவர் பகுதிகளில் இதனைத் தொடங்கி வைத்த நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அவர் படித்த தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பு எனக்கு அமைந்தது.

குழந்தைகள் தெம்புடன் பாடங்களைக் கவனிக்கும் வகையில் சத்தான காலை உணவு, அவர்களது அன்னையரின் பணிச்சுமையைக் குறைக்கின்ற பொறுப்பு, பெற்றோரின் நிலை உணர்ந்து தாயுள்ளத்துடன் அரசாங்கமே குழந்தைகளின் நலனில் காட்டுகின்ற அக்கறை, தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைமுறை உடல்நலத்துடன் அறிவு வளர்ச்சி பெற்றிடுவதற்கான கட்டமைப்பு எனக் காலை உணவுத் திட்டம் பலராலும் பாராட்டப்படுகின்ற திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் பிறந்த ஊரில், அவர் வழியில் நடைபோடும் திராவிட மாடல் அரசின் விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டம் எனும் இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இதுவரை செயல்படுத்தப்படாத மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிக் காத்த கழகத்தையும், அந்தக் கழகத்தின் தலைமையில் அரசு அமையும் போதெல்லாம் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும் எண்ணிப் பார்த்தேன்.

**தன்னிகரற்ற தலைவர் கலைஞர் தன் தோளிலும் நெஞ்சிலும் அரைநூற்றாண்டு காலம் சுமந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் சுமக்கத் தொடங்கி இன்றுடன் (ஆகஸ்ட் 28) ஐந்தாண்டுகள் நிறைவடைகின்றன. 94 வயதில் 80 ஆண்டு காலப் பொதுவாழ்க்கை எனும் நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டவர் தலைவர் கலைஞர். பன்முக ஆற்றல் கொண்ட நிர்வாகி - படைப்பாளர். அவருடைய பேராற்றல் எனக்கு இல்லை. ஆனால், தலைவர் கலைஞரிடம் நான் கற்றுக்கொண்டு, அவரிடமே பாராட்டு பெறும் அளவிற்கு உழைக்கக்கூடிய வலிமை எனக்கு உண்டு. இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்திடக் கலைஞரும் அவருடைய ஒவ்வொரு உடன்பிறப்பும் எப்படி உழைத்தார்களோ, அதுபோலத்தான் கலைஞரின் பிள்ளையான நானும் ஓர் உடன்பிறப்பு என்ற தகுதியுடன் தலைமைப் பொறுப்பினை சுமந்து, உங்களில் ஒருவனாக உழைத்துக் கொண்டிருக்கிறேன்.**

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரை 2018-ஆம் ஆண்டு இயற்கை நம்மிடமிருந்து பிரித்தபோது, இயக்கத்தைக் காக்கும் பெரும் பொறுப்பை உங்கள் அனைவரின் ஆதரவுடன் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் என் மீது சுமத்தினார். கலைஞரின் உடன்பிறப்புகளான நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையுடன் நானும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அப்போது, கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. நாடாளுமன்ற மக்களவையில் நமக்கு ஒரு இடம் கூட இல்லை. தலைவரை இழந்த கழகத்தில் பிளவு வராதா என்று எதிர்பார்த்த எதிரிகள் உண்டு. வெற்றிடம் ஏற்பட்டுவிட்டதாக கற்பனைக் குதிரையில் பயணம் செய்ய நினைத்தவர்கள் உண்டு. முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக் காக்கப்பட்ட இந்த இயக்கம் எப்போதும் ஒன்றுபட்டு நிற்கும் என்பதை ஒவ்வொரு உடன்பிறப்பும் மெய்ப்பித்துக் காட்டியதுடன், ‘வெற்றிடத்திற்கு வேலை இல்லை, இது வெற்றிக்கான இயக்கம்’ என்பதை நம் உழைப்பால் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் வலிமையான கூட்டணியை உருவாக்கினோம். அது வெறும் தேர்தல் நேரக் கூட்டணி அல்ல. கொள்கை உணர்வுமிக்க கூட்டணி. ஜனநாயகத்தின் மீதும், நாட்டின் பன்முகத் தன்மை மீதும், மதச்சார்பின்மை கொள்கை மீதும் நம்பிக்கையும் உறுதியும் கொண்ட கூட்டணி. நாடாளுமன்றத் தேர்தலில் அந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தமிழ்நாட்டில் பெற்ற மகத்தான வெற்றி என்பது இந்திய அளவிலான அரசியல் இயக்கங்களுக்கு ஒரு ஃபார்முலாவாக ஆனது. மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சி என்ற தகுதியை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது. கழகத்தை வழிநடத்தும் பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான எனக்கு உடன்பிறப்புகளாகிய நீங்கள் தேடித் தந்த பெருமை இது.

> **இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். கழகத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி.. வெற்றி.. மகத்தான வெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக் களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும்.**

அதன்பிறகு நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலிலும் அதே கூட்டணி களம் கண்டு, தமிழ்நாட்டு உள்ளாட்சித் தேர்தல் வரலாற்றில் அதுவரை இல்லாத வகையில், எதிர்க்கட்சியின் வெற்றி பதிவு செய்யப்பட்டது. உடன்பிறப்புகளாம் உங்களின் உழைப்புதான் அன்றைய ஆளுங்கட்சியினரின் பணபலம், அதிகார பலம் எல்லாவற்றையும் மீறிக் கழகத்தையும் தோழமைக் கட்சிகளையும் வெற்றி பெறச் செய்தன.

இந்த வெற்றிகள் நமக்கு ஊக்கத்தை அளித்தன. ஆனாலும், ஆறாவது முறையாகத் தலைவர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு அமையாமல் போய்விட்டதே என்ற ஏக்கம் என் நெஞ்சில் நீடித்தது. பேரறிஞர் அண்ணா அருகில் தலைவர் கலைஞர் ஓய்வு கொள்ளப் போய்விட்டாலும் நம் இதயத்துடிப்பாக அவர்தானே இருக்கிறார். அவர்தானே நம்மை இயக்குகின்ற பேராற்றலாக இருக்கிறார். அதனால், சட்டமன்றத் தேர்தலிலும் கழகம் வெற்றிபெற்று, அந்த வெற்றியை முத்தமிழறிஞர் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்க வேண்டும் எனச் சூளுரைத்தேன்.

2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கொள்கைக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. அதற்கு உடன்பிறப்புகளாகிய உங்களின் ஓயாத உழைப்பும் - ஒற்றுமையான செயல்பாடும் முக்கியமான காரணமாகும். அதன் விளைவாக, தி.மு.க.வுக்குத் தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை பலத்தை தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்கள். என்னுடைய வெற்றிச்

## உங்களில் ஒருவன்

சான்றிதழை முத்தமிழறிஞர் கலைஞர் ஓய்வுகொள்ளும் இடத்தில் வைத்து, நன்றிக் காணிக்கை செலுத்திவிட்டு, பதவியேற்பு நிகழ்விலும் அவர் பெயரையும் சேர்த்தே உச்சரித்து, இது கலைஞர் அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் என்பதை உறுதி செய்தேன்.

கழகத்தின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு நாளும் மக்களுக்கான திட்டங்கள்தான், சாதனைகள்தான்! சிறு குறை சுட்டிக்காட்டப்பட்டாலும் உடனடியாக அதனைச் சரி செய்து, ஆட்சி சக்கரம் விரைவாகவும் வலுவாகவும் சுழலும் வகையில் உழைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த உழைப்புக்கு மக்கள் தந்த அங்கீகாரம்தான் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கழகத்திற்கும் கூட்டணிக்கும் கிடைத்த மகத்தான வெற்றி.

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் உண்மையான ஜனநாயக சக்திகளுடன் இணைந்து பயணிக்கின்ற இயக்கம். மக்கள் நலனுக்கு ஆதரவானவர்கள் யார், மக்களின் எதிரிகள் யார் என்று அடையாளம் கண்டு செயல்படுகின்ற இயக்கம். அந்த வகையில்தான் 2019-ஆம் ஆண்டு அமைந்த கொள்கைக் கூட்டணி அடுத்தடுத்த தேர்தல்களிலும் உறுதியாகத் தொடர்வதுடன், ஒவ்வொரு தேர்தல் களத்திலும் வெற்றியும் தொடர்ந்து வருகிறது.

அதுபோல, கழக உடன்பிறப்புகளும் இந்த இயக்கத்தின் இலட்சியமே பெரிது என்று ஒன்றுபட்டு உழைக்கும்போது மகத்தான வெற்றி கிடைக்கிறது. தி.மு.கழகம் தமிழ்நாட்டை நிரந்தரமாக ஆட்சி செய்ய வேண்டும் என்பது உங்களில் ஒருவனான என் இலக்கு. தொடர்ச்சியாக நாம் ஆட்சியில் இல்லாத சூழல்களால் தமிழ்நாட்டின் வளர்ச்சி எந்தளவு பாழ்பட்டது என்பதைப் பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் மக்கள் பார்த்தார்கள். அனுபவித்தார்கள். அந்த நிலையைக் கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு மாற்றி இருக்கிறோம். வளர்ச்சிப் படிக்கட்டுகளில் தமிழ்நாடு முன்னேறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த வளர்ச்சி நீடிக்க வேண்டும் என்றால் தி.மு.கழகம் தொடர்ந்து ஆட்சி செய்கின்ற வாய்ப்பு அமைய வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் தங்களுக்கு எக்காலத்திலும் வெற்றி வாய்ப்பு இல்லாத தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதை மக்கள் அறிவார்கள். தங்கள் கட்சியின் ஆட்சி நடைபெறும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைவிடப் பெருமளவு குறைவாகவே தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். இத்தகைய நிலையிலும், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அயராமல் உழைக்கிறது திராவிட மாடல் அரசு. விடியல் வெளிச்சத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

**ஒன்றிய ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டால்தான், நமது மாநிலத்திற்குரிய நிதி ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கும். முழுமையான வெளிச்சம் பரவும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே மதவாத இருட்டை விரட்டும் விடியல் தேவைப்படுகின்ற காலம் இது. அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்த இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பா.ஜ.க அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது. அந்த இந்தியாதான் இந்தியாவுக்கு விடியலைத் தரக்கூடிய வலிமை கொண்டதாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திகழும்.**

இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். கழகத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி.. வெற்றி.. மகத்தான வெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக் களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும்.

ஒற்றுமையுடன் கூடிய உழைப்பு எப்போதுமே வெற்றியாக விளையும். கழக உடன்பிறப்புகள் அந்த ஒற்றுமையைக் கட்டிக்காத்து உழைத்திட வேண்டும் என்பது கழகத் தலைவர் என்ற முறையில் எனது அன்பு வேண்டுகோளாகும். உங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க நான் இருக்கிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்ற நீங்கள் இருக்கிறீர்கள். நம் உயிருக்கு உயிராகத் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் இருக்கிறது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக்காக்கப்பட்ட தி.மு.க எனும் பேரியக்கம், நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமான விடியலைத் தர வேண்டிய பொறுப்பில் பங்கேற்றிருக்கிறது. உங்கள் ஆதரவுடன் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற, உங்களில் ஒருவனான நான் ஆயத்தமாக இருக்கிறேன். காண்கின்ற களம் அனைத்திலும் வெற்றியைக் குவிப்போம்.

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆவணி 11
28-08-2023.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 30-08-2023

# பசிப்பிணி மருத்துவர்

சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னன், ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால் 'பசிப்பிணி மருத்துவன்' என்று போற்றப்பட்டுள்ளார்.

'பசிப்பிணி மருத்துவன் இல்லம்

அணித்தோ சேய்த்தோ?' என்கிறது புறநானூறுப் பாட்டு. அத்தகைய பசிப்பிணி மருத்துவராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டத்தை கலைஞர் அவர்கள் பிறந்த திருக்குவளை பள்ளியில் தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்கள், தனது வாழ்விலோர் பொன்னாள் என்று சொல்லி இருக்கிறார். அவரது ஆட்சியே பொற்கால ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி - என்கிறார் வள்ளுவர். வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் என்கிறார் வள்ளுவர். அதையும் தாண்டிய ஒரு கருத்தை முதலமைச்சர் சொல்லி இருக்கிறார். **'காலை உணவுத் திட்டத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்வதை நிதி ஒதுக்கீடு என்று சொல்ல மாட்டேன், நிதி முதலீடு ஆகும்'** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டு மாணவ சமுதாயத்தின் அறிவுக்கு முதலீடு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில் - இந்த திட்டத்தை தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர்.

அவ்வை மூதாட்டி சொன்னாரே... பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்று. பசி வந்து அந்த பசியைத் தீர்க்க உணவு கிடைக்காத மனிதன் தன்னிடமுள்ள மானம், குலம், கல்வி, வன்மை, அறிவு, தானம், தவம், காமுறுதல், முயற்சி, தாளாமை - ஆகிய பத்தையும் இழந்து விடுவான் என்றார். அந்த வகையில் பசியைப் போக்கினால்...? அனைத்துச் செல்வங்களும் அந்த மாணவச் செல்வங்களை அடையுமே? அதைத்தான் செய்திருக்கிறார் முதலமைச்சர்.

**"சென்னை அசோக் நகரில் உள்ள பெண்கள் மேனிலைப்பள்ளிக்கு ஒரு விழாவுக்கு நான் சென்றிருந்தபோது அங்கு படிக்கும் மாணவிகளிடம் பேசிக் கொண்டு இருந்தேன். காலையில என்ன சாப்பிட்டீங்க என்று கேட்டேன். சாப்பிடவில்லை என்று பெரும்பாலானவர்கள் சொன்னார்கள்.**

**எங்க வீட்டுல சமையல் பண்ணல என்று ஒரு மாணவி சொன்னார். மத்தியானம் ஸ்கூல்ல சாப்பிட்டுக்கோ என்று அம்மா சொல்லிட்டாங்க என்று இன்னொரு மாணவி சொன்னார். காலையில் டீ குடிச்சிட்டு வந்தேன் என்று மற்றொரு மாணவி சொன்னார். இதை எல்லாம் மனதில் வைத்துத்தான் காலை உணவுத் திட்டம் உருவாக்கப்பட்டது"** என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது எத்தனை உண்மையான சொற்கள் என்பதை இணைய தளத்தில் பலரும் எழுதி பாராட்டி வருகிறார்கள்.

ப்ரியம்யா என்ற பதிவர் ஒருவர் எழுதி இருக்கிறார்...

"மதிய உணவுக்காக மட்டுமே பள்ளி வரும் பிள்ளைகளை எனக்கு பரிச்சயம் உண்டு. செல்லப்பூனை போல சிறுகுடலைத் தூங்க வைத்து இருப்பார்கள். காலை ஒண்ணுக்கு பெல் அடிக்கும் போது பள்ளி சமையலறை கூடத்திலிருந்து கிளம்பும் தாளிப்பு மணம் வயிற்றில் சமத்தாய் தூங்கும் பூனையின் காதை பிடித்து உயர்த்த புலன் விழிப்பார்கள். சாப்பிட்டியா என்று கேட்கவே பயமாக இருக்கும். இல்லை என்று சொல்ல மாட்டார்கள் பெரும்பாலும். ஆமாம் என்றும் சொல்ல மாட்டார்கள்...

வருடந்தோறும் குமார் என்றும்,கண்ணன் என்றும் முனீஸ்வரன் என்றும் பெயர் மட்டும் மாறுகிறது. ஆனால் பசி கர்ப்பக்கிரகம் விக்கிரகம் போல கருக்கு மங்காது இருக்கிறது. இதற்காகவே மதிய உணவுக்கு பின்னர் கணித பாடவேளையை மாற்றி வைக்க சொல்லி சண்டையிட்ட ஒரு ஆசிரியரை எனக்கு தெரியும். என்ன sir காலையில fresh ஆக கணக்கு போடாமல் தூக்கம் வரும் பீரியட்களை வாங்கி வைக்கிறீர்கள் என்போம். பசியில் என்ன படிப்பான் பிள்ளை வயிறு நிறையட்டும் முதலில்.... அதுதான் ஆதார சூத்திரம் என்பார் வெள்ளை சிரிப்போடு.

இந்நிலையில் அரசு காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது எனக்கு உவகையையே தருகிறது. பணிப்பளு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம். இப்போது தட்டு நிறைய பொங்கலும், கிச்சடியும் நிரப்பிக்கொண்டு குட்டி குட்டி விரல்கள் உணவை அள்ளி அள்ளி வாயில் இட்டுக் கொள்கிற ஒரு சித்திரம் என் மனதில் விரிகிறது. நீங்கள் எதையோ பேசிக்கொண்டே கிடங்கள்... அதற்குள் எத்தனையோ கண்ணனும், கார்த்திக்கும், குமரனும் ஒரு பிடியாவது வளர்ந்திருப்பான்கள் இல்லையா?" என்று எழுதி இருக்கிறார் ப்ரியம்யா. இத்தகையவர்களை நினைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கிய திட்டம் இது.

**"ஒன்பது வயதில் தந்தையை இழந்தவன் நான். உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டேன். அப்படி ஒரு சூழலில்தான் நான் பள்ளியில் மதிய உணவு சாப்பிடத் தொடங்கினேன். மதிய உணவு சாப்பிட்ட கையோடு வகுப்பறையில் அமர்ந்து நண்பர்களோடு இணைந்து படித்த அனுபவங்கள் அதிகம். நான் மேடைப் பேச்சாளர் ஆவதற்கான விதையும் அங்குதான் முளைத்தது. அந்த அனுபவங்களே நான் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 456 மதிப்பெண்கள் எடுக்க உந்துசக்தியாக இருந்தன. அந்த மதிப்பெண்களுக்குப் பிறகு என் உறவினர்களே என்னை மதிக்க ஆரம்பித்தார்கள்.**

**யாரிடமும் போய் நிற்கக் கூடிய சூழலைத் தராத கல்வித் திட்டத்தில் மதிய உணவு கிடைப்பது பெரும்பேறாக இருந்தது எனக்கு. 15 ஆண்டுகளுக்குப் பிறகு தான் இதன் பெருமையை, உன்னதத்தை, உண்மையான பலனை நாம் அறிந்து கொள்ள முடியும். இது வயிற்றுப் பசி, அறிவுப் பசி தொடர்புடையது மட்டுமல்ல, உளவியல் தொடர்புடையதும்கூட. அதை காலம் மிகச் சரியாக உணர்த்தும் என நம்புகிறேன்"** என்று எழுதி இருக்கிறார் நாகப்பன் என்ற பதிவர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நோக்கத்தை இதை விட அழகாக யாரும் சொல்ல முடியாது.

"பெற்றோர் இருவருமே வேலைக்கு போகும் குடும்பங்கள் அதிகமாகி விட்டது. இந்த நிலையில் காலை உணவு தயாரிப்பு என்பதே சிரமம் ஆகிறது மத்திய தரவர்க்கத்தில். இந்தநிலையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஏழை எளியவர்க்கு மட்டுமல்ல எல்லார்க்கும் நன்மை தருவது தான்" என்கிறார் ஒரு பெண்மணி.

**இலட்சக்கணக்கான குடும்பங்களின் கவலையை நீக்கும் பசிப்பிணி மருத்துவராய் உயர்ந்து நிற்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023 பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.08.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

### என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை! அன்பில் மகேஷ்பொய்யாமொழி, எஸ்.இரகுபதி, என்.இளையராஜா பங்கேற்பு!

நாகை, ஆக.30-

நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நாகையில் புதிய பேருந்து நிலையம் அருகே அவுரித் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என். இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், டி.அசோக், கோ. தாமோதரன், ஜெ.ஆர். கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, வேதாரண்யம் மா.மீ.புகழேந்தி, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார், நகரக் கழகச் செயலாளர்கள் கீழ்வேளூர் கா. அட்சயலிங்கம், வேளாங்கண்ணி மரியசார்லஸ், தலைஞாயிறு சுப்பிரமணியன், திட்டச்சேரி முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், ஆர்.சுரேந்தர், மு. தினேஷ், என்.கே.ஜி.ஏ. சேகர், அ.பாரிபாலன், க. சத்தியமூர்த்தி, பி.கமல், எஸ்.வெற்றிவேல், ஆர்.ஏ. டி.அண்ணாதுரை, எஸ். வி.டி.அருள், இளம்.சுந்தர், த.தமயந்தி, ஆர்.துரைராஜ், கே.எஸ்.சாகுல்ஹமீது ராஜா, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.புவனேஸ்வரி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகத்தினர் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க.வீரையா அவர்களின் சகோதரர் ஒன்றுபட்ட புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் அமரர் க.சிதம்பரம் அவர்களின் துணைவியாரும், தொழிலதிபர் சி.ஆசைத்தம்பியின் தாயாரும், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணனின் அத்தையுமான சி.ராஜேஸ்வரி அம்மையார் சமீபத்தில் மறைவெய்தினார். கழக இளைஞரணிச் செயலாளரும், விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை அம்பாள்புரம் வீட்டில் உள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மு.கலியமூர்த்தி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஆகியோர் உள்ளனர்.

## மாநிலத்தில் பணவீக்கம் குறைந்து வருவது ஆட்சிக்குக் கிடைத்த நற்சாட்சிப் பத்திரம்!

# தொழில்நுட்ப வளர்ச்சியை அதிகரிக்க திட்டமிட்டு வருகிறோம்!

## சென்னை போரூரில் அமெரிக்க நிறுவன தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஆக.30-

**தமிழ்நாட்டில் தொழில்நுட்ப வளர்ச்சியை அதிகரிக்க திட்டமிட்டு வருகிறோம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023) அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட UPS நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை, போரூரில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்து உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

**இந்நிகழ்வில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

யுனைடெட் பார்சல் சர்வீசஸ் எனப்படும் உங்களது நிறுவனமான உலக அளவில் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகவும், சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள நிறுவனமாகவும் திகழ்கிறது. இத்தகைய உலகப் பெருமை கொண்ட நிறுவனம், இந்தியாவில், அதிலும் குறிப்பாக, சென்னை போரூரில் தொழில்நுட்ப மையத்தை திறப்பது தமிழ்நாட்டுக்கும், எங்கள் ஆட்சிக்கும், எனக்கும் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது.

### நல்லாட்சி நடைபெறுவதால் நிறுவனங்கள் வருகை!

இதற்காக உங்கள் நிறுவனத்திற்கும், நிறுவன உரிமையாளருக்கும், பொறுப்பு வகிக்கும் தலைவர்களுக்கும், துணைத் தலைவருக்கும், அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உங்களைப் போன்ற நல்ல நிறுவனங்கள் இங்கு வருவதை தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதன் அடையாளமாகவே நான் பார்க்கிறேன். எங்கள் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாங்கள் எப்போதும் காப்போம் என்று உறுதி அளிக்கிறேன்.

இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரமாகப் பல்வேறு தரவரிசைகளில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. இந்த நிலையைத் தக்க வைத்துகொள்ள மட்டுமல்ல, இதனை மேலும் வளர்க்க விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல எங்களது அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கடந்த வாரம் பொருளாதார வல்லுநர்களுடன் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு நான் பேசியுள்ளதை பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது புதிய மற்றும் விரிவாக்கத் திட்டத்திற்கான முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளன. முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலக தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், துறை சார்ந்த கொள்கை வெளியீடுகளை வெளியிட்டு வருகிறோம்.

### திருவள்ளூர் – கோவையில் பல்முனையப் போக்குவரத்துப் பூங்கா!

அந்த வகையில், மாநிலத்தில் ஒருங்கிணைந்த, நம்பகமான, செலவு குறைந்த மற்றும் நிலைக்கத்தக்க சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காகவும் திட்டங்களை தீட்டினோம். தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் திட்டம், 2023 கடந்த மார்ச் மாதம் என்னால் வெளியிடப்பட்டது. சரக்குப் போக்குவரத்துத் துறைக்கென சென்னைக்கு அருகே திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில் பல்முனையப் போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. தொழிற்சாலைகள் நிறைந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலும் ஒரு பல்முனையச் சரக்குப் போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, நமது தொழில்துறையும் உரிய மாற்றங்களை மேற்கொண்டு, அதே வேகத்தில் பயணம் மேற்கொள்வது அவசியமானது. இதனை மனதில் கொண்டு, கடந்த ஆண்டு தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கையை நான் வெளியிட்டேன்.

நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கு (Industry 4.0) ஏற்ப, நமது தொழிலகங்களையும், தமிழ்நாட்டு இளைஞர்களையும் தயார்படுத்திட வேண்டும் என்பதில் எங்கள் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாட்டு ஏழை, எளிய மாணவர்களுக்கும், வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களில் திறன் பயிற்சி அளித்து, அவர்கள் எதிர்கால வேலைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில், எனது கனவுத் திட்டமான “நான் முதல்வன்” செயல்பாட்டில் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு, டாடா டெக்னாலஜீஸ் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து 71 அரசு தொழில் பயிற்சி நிலையங்களைத் (Government ITIs) தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தியுள்ளது.

### தரம் உயர்த்தப்பட்ட தொழில் பயிற்சி மையங்கள்!

தொழில்துறை புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொடக்கநிலைத் தொழில் முனைவோர் விரைவில் வளர்ந்திடவும், தமிழ்நாட்டில் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், அரசு திட்டமிட்டு வருகிறது. நமது இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு, அதிநவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்திடவும் எங்கள் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (TIDCO) இணைந்து மூன்று புதிய நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

1. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான தசோ சிஸ்டம்ஸ் (Dassault Systems) உடன் இணைந்து, தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையமும் –

2. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான சீமென்ஸ் உடன் இணைந்து, தமிழ்நாடு திறன்மிகு & மேம்பட்ட உற்பத்தி மையமும் –

3. அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான ஜி. இ. ஏவியேஷன் உடன் இணைந்து தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையமும் அமைக்கப்பட்டுள்ளன.

திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையங்கள் (Industrial Innovation Centres) அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதி வாய்ப்புகளை அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி, தங்களது தொழில் வளர்ச்சியை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையங்கள்!

கடந்த சில ஆண்டுகளாகவே, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres) அதிகரித்துள்ளதாக அறிகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2021 ஆம் ஆண்டிலிருந்து, இதுவரை, முப்பதுக்கும் மேற்பட்ட GCCக்கள் தமது புதிய நிறுவனங்களையோ அல்லது விரிவாக்கத் திட்டங்களையோ நிறுவியுள்ளன.

இந்த மையங்கள் மூலம் 47 ஆயிரம் நபர்களுக்கு உயர்தரத் திறன் மிகுந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த 3 அல்லது 4 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள GCCக்களின் எண்ணிக்கை பல மடங்கு உயரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அண்மையில் வெளியிடப்பட்ட குஷ்மேன் & வேக்ஃபீல்ட் அறிக்கையின்படி, பொறியியல் பட்டதாரிகளின் இருப்பு, வணிகம் புரிவதற்கும், வாழ்வதற்கும் நிலவும் எளிதான சூழல் மற்றும் நல்ல நிர்வாகம் போன்ற காரணிகளால், இந்தியாவிலேயே GCCக்களுக்கான முதல் 2ஆம் அடுக்கு நகரமாக கோயம்புத்தூர் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பயிற்சி!

அந்த வகையில், சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையில், உலகளாவிய முன்னணி நிறுவனமான UPS, சென்னை போரூரில் 400க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு, குறிப்பாக, கிராமப்புற இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து பணியமர்த்தும் திட்டத்துடன் அமைத்துள்ள இந்தத் தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது கனவுத் திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, இந்த மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புப் பயிற்சி (Internship) பெறுவதற்கான கடிதங்களை வழங்கும் வாய்ப்பும் கிட்டியது, உள்ளபடியே எனக்கு பெரும் மகிழ்ச்சி அளித்துள்ளது.

கொரோனா நெருக்கடிக்குப் பிறகும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகச் சீராக இருப்பதாகவும், உயர்ந்து வருவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நேற்றைய தினம் “தி இந்து” ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியை உங்களில் பலரும் படித்திருப்பீர்கள்.

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநிலப் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் சில ஆய்வுகள் நடத்தப்பட்டன. அப்போது கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்துத்தான் ‘இந்து நாளிதழ்’ அந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கொரோனா என்ற கொடுமையான காலக் கட்டத்தில்தான் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம். கொரோனா மருத்துவ நெருக்கடியை மட்டுமல்ல, நிதி நெருக்கடியையும் ஏற்படுத்தியது. ஆனால், கொரோனாவையும் வென்றோம்; நிதி நெருக்கடியையும் சேர்த்தே வென்றுள்ளோம்.

2011-12 நிதியாண்டு முதல் கொரோனாவுக்கு முந்தைய காலம் வரை மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்ற இறக்கங்களுடன் 5.80 விழுக்காடாக இருந்தது.

### தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.19%!

தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், 2022-23ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 14 லட்சத்து 53 ஆயிரத்து 321 கோடி ரூபாயாகும். வளர்ச்சி விகிதத்தில் இது 8.19 விழுக்காடாகும்.

2021-22ஆம் ஆண்டில், நடப்பு விலைகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

2021-22 மற்றும் 2022-23இல் அகில இந்திய அளவிலான பணவீக்கம் 9.31 விழுக்காடு மற்றும் 8.82 விழுக்காடாக இருந்த நிலையில், தமிழ்நாட்டின் பணவீக்கக் குறியீடு 2021-22இல் 7.92 விழுக்காடாகவும், 2022-23இல் 5.97 விழுக்காடாகவும் குறைந்துள்ளது என்றும் இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது புள்ளிவிவரம் மட்டுமல்ல; இந்த ஆட்சிக்கு கிடைத்த நற்சாட்சிப் பத்திரம்!

தமிழ்நாட்டை 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். இந்த அளவுகோலை 2034ஆம் ஆண்டுக்குள் நாம் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையை ‘தி இந்து’ நாளிதழ் உறுதி செய்து எழுதி இருக்கிறது. இந்த நல்ல செய்தியை உங்களோடு பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியடைவதோடு, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என உங்களுக்கு அன்போடு அழைப்பு விடுக்கிறேன்.

உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற எனது வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் 400– க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, UPS நிறுவனத்தின் உலகளாவிய தலைமை டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பாலசுப்ரமணியன், தலைமை மனிதவள அலுவலர் டேரல் ஃபோர்டு, இந்தியாவிற்கான துணைத் தலைவர் சுப்ரமணி ராமகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

> **“இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரமாகப் பல்வேறு தரவரிசைகளில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. இந்த நிலையைத் தக்க வைத்துகொள்ள மட்டு மல்ல, இதனை மேலும் வளர்க்க விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல எங்களது அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கடந்த வாரம் பொருளாதார வல்லுநர்களுடன் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு நான் பேசியுள்ளதை பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.”**

---

## தேசிய அளவில் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு 2வது இடம்!

# திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மூலம் வளர்ச்சி விகிதம் 8.19% அதிகரிப்பு!

### நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை, ஆக.30-

தேசிய அளவில் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு 2வது இடம் பிடித்துள்ளதாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் தனிநபர் ஆண்டு வருமானமும் அதிகரித்துள்ளதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் உள்ள மாநில திட்டக் குழு அலுவலகத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய அமைச்சர் தங்கம் தென்னரசு, 2021-22 ஆண்டில் இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாக தெரிவித்தார்.

மேலும் கொரோனா தொற்றுக்கு பிறகு சரிவில் இருந்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் இரண்டு ஆண்டுகளில் அதிகரித்து 8.19 சதவிகிதமாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் தனிநபர் ஆண்டு வருமானம் அதிகரிப்பு!

மேலும், தமிழ்நாட்டின் தனிநபர் ஆண்டு வருமானம் 2021-22ம் ஆண்டில் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 557 ரூபாயும், 2022-23ம் ஆண்டில் 1 லட்சத்து 66 ஆயிரத்து 727 ரூபாயாக அதிகரித்துள்ளதாக கூறினார்.



---

முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை! பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில்

## தளபதி மு.க.ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ நூல் கருத்தரங்கம்!

### தஞ்சை கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார்!

சென்னை, ஆக. 30-

தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘உங்களில் ஒருவன்’ நூல் குறித்து தஞ்சை, கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார். முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை நிகழ்த்து கிறார்.

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி. ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சுழலுகின்ற பூமிப்பந்தில் சுடர்விட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறையான திராவிடர் கழகத்தின் துணை அமைப்புகளில் ஒன்றான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், நாளை (31.8.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலில் அமைந்துள்ள அன்னை திருமதி ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அதில் தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன், தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய “உங்களில் ஒருவன்” எனும் நூல் குறித்து ஒன்பதாவது தொடர்சொற்பொழிவை ஆற்றுகிறார். தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் முனைவர் நா.சந்திரபாபு தொடக்க உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வுக்கு பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென். மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அனைவரும் வரவேண்டுமென வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம், நம்பியூர், பவானி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து, முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம், கள்ளிப்பட்டி மணி, உள்ளாட்சி துறை பிரதிநிதிகள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் தி.முருகேசன், ஒன்றியக் குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்புகளை

# தமிழில் மொழிபெயர்த்து வெளியிட - ரூ.3 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக.30–**

**சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பான முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு :-

1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது தான் வரலாற்றுச் சிறப்புமிக்க ‘இருமொழிக் கொள்கை’ தீர்மானம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே பின்பற்றப்பட்டு வருவதோடு, பல துறைகளிலும் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், காலத்துக்கேற்ப தமிழை வளர்த்தெடுக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழைச் சட்ட ஆட்சிமொழியாகக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில், அதற்காகத் தயாராகும் வகையில், மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் மற்றும் சட்டத்துறையின் தமிழ்ப்பிரிவு மூலமாகத் தமிழில் சட்டச் சொற்களஞ்சியம் தயாரித்து அச்சிடுவது, மாநில மற்றும் ஒன்றியச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் அறிவிக்கைகளையும் தமிழில் மொழிபெயர்த்தல் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு அரசின் சட்டத்துறை செய்து வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்து அதற்கான முயற்சிகளை எடுத்து வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிவரும் இந்தத் தருணத்தில் தமிழைச் சட்ட ஆட்சி மொழியாக்கும் அவரது கனவை நனவாக்கவும், அனைத்து மக்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும் மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் மூலமாகச் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து அவற்றைப் பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களது பயன்பாட்டிற்காகக் கொண்டு செல்ல வேண்டும் என்று கலைஞர் அவர்களின் வழிநடக்கும் நமது அரசு முடிவு செய்துள்ளது.

இப்பணிக்காக மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு முதற்கட்டமாக மூன்று கோடி ரூபாயும், பின்னர் தேவைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன். “தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே” என்று பாவேந்தர் காட்டிய வழியில் செம்மொழித் தமிழுக்குச் சட்டத்துறையிலும் உரிய இடத்தைப் பெற்றுத் தருவோம்!

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன்

# தமிழ்நாடு அரசின் ஊக்கத் தொகையினையும் சேர்த்து வழங்க ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 30-

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையினையும் சேர்த்து வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் காரிப் பருவம் 2002-2003 முதல் ஒன்றிய அரசின் முகவராக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு ஒன்றிய அரசின் தர நிர்ணயத்திற்குட்பட்டு நெல் கொள்முதல் செய்து வருகிறது.

கடந்த 2022-2023 காரீப் கொள்முதல் பருவத்தில் 21.08.2023 வரையில் 3526 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5,20,503 விவசாயிகளிடமிருந்து 43,84,226 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.9,414.58 கோடி விற்பனை தொகையாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் காரீப் கொள்முதல் 2023-2024 பருவத்தில் தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய மாநில அரசு முடிவெடுத் துள்ளது.

இந்த ஆண்டு 12.06.2023 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான அளவு விதைகள் மற்றும் உரங்கள் குறுவை தொகுப்பு திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளின் நலன் கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காரீப் 2023-2024 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2023 முதற்கொண்டு மேற்கொள்ள ஒன்றிய அரசை கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் காரீப் 2023-2024 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2023 முதற்கொண்டு மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

ஒன்றிய அரசு காரீப் 2023-2024 பருவத்திற்கு குறைந்தபட்ச ஆதாரவிலையாக சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,183/-என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,203/- என்றும் நிர்ணயித்துள் ளது.

இந்நிலையில் நெல் உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் துயர்துடைத்து அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கோடும், கே.எம்.எஸ். 2023-2024 கொள்முதல் பருவத்திற்கு சாதா ரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.82/-ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.107/-ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழக அரசின் நிதி யிலிருந்து வழங்க ஆணை பிறப்பித்து அதன்படியே, தற்போது சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,265/- என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,310/- என்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்கும் விவசாயிகளுக்கு வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், இந்த புதிய குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகையினை 01.09.2023 முதல் வழங்கவும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா தலைமை

# பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் - குன்னம் சி.இராஜேந்திரன் - பிரபாகரன் முன்னிலை!

*பெரம்பலூர், ஆக.30-*

*மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் முடிந்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,*

*தமிழகத்தில் 12 ம்வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் ஏழை எளிய மக்கள் மருத்துவராக வேண்டும் என நுழைவு தேர்வினை ரத்து செய்தது தி.மு.க. அரசு தான். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருந்த வரை தமிழகத்தில் நீட் தேர்வு கொண்டுவரப்படவில்லை, அதன் பின்னர் தான் அ.தி.மு.க. ஆட்சியில் தான் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டது. இந்த நீட் தேர்வால் இதுவரை 21 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதற்கு காரணம் மத்திய பா.ஜ.க. அரசும், அ.தி.மு.க. அரசும் தான். தமிழகத்தில் நீட் தேர்வு ரத்து செய்யவேண்டும் என சட்டசபையில் 2 முறை தீர்மானம் நிறைவேற்றி கவர்னர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த நீட் தேர்வு ரத்து ஆகும் வரை தொடர் போராட்டம் நடத்தப்படும்.*

*இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் 1ம்வகுப்பு முதல் 5ம்வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டம் மிகபெரிய வரவேற்பை பெற்றுள்ளது.*

*பிரதமர் நரேந்திர மோடி அவரது நெருங்கிய நண்பர் அதானி இல்லாமல் எங்கும் செல்லமாட்டார். இந்தியாவில் உள்ள அனைத்து பொதுத்துறையும் அதானியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதானி விமான நிலையம், ரயில்வே ஸ்டேசன், போர்ட், ஸ்டேடியம் என அனைத்தும் வந்து விட்டது. உலக பணக்காரர்களில் இரண்டாவது பணக்காரர் அதானி தான். சி.ஏ.ஐ. மத்திய, மாநில அரசின் வரவு செலவு பட்டியலை தணிக்கை செய்யும் அமைப்பு . இந்த அமைப்பு தணிக்கை செய்து வெளியிட்ட அறிக்கையில் துவராக விரைவு சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை சாலை அமைக்க 18 கோடி செலவு செய்ய அனுமதி உள்ளது. ஆனால் இதில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தை 6 வழிச் சாலை என கணக்கு காண்பித்து 250 கோடி செலவு செய்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.*

*ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவ காப்பீடு தொகை கொடுத்துள்ளனர். 6 சுங்கசாடியில் 120 கோடி முறைகேடாக மக்களிடமிருந்து கொள்ளையடித்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. நாங்கள் மோடிக்கும் பயப்படமாட்டோம். உங்களது இ.டி, சி.பி.ஐ, ஐ.டி. போன்றவற்றிற்கும் பயப்படமாட்டோம்.*

*பா.ஜ.க. அரசு ஆளும்கட்சியாக உள்ள மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 5 மாதங்களாக நடந்து வரும் கலவரத்தில் 250க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். மணிப்பூரைச் சேர்ந்த 18 விளையாட்டு வீரர்கள் தமிழகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதியினையும் செய்து தரப்பட்டுள்ளது.*

*வரும் 2024ம் நடக்கும் எம்.பி தேர்தலில் பா.ஜ.க.வும், அ.தி.மு.க. வையும் ஒழித்ததாக வேண்டும். இந்த தேர்தலில் 40க்கு 40 தொகுதியிலும் வெற்றி பெற இளைஞரணியினர் பாடுபடவேண்டும். சேலத்தில் வரும் டிசம்பர் 13ம் தேதி தி.மு.க. இளைஞரணி மாநாடு நடத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டில் இளைஞரணியினர் அனைவரும் குடும்பத்தோடு வந்து கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.*

*அதன் பிறகு பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளிடம் சிகிச்சை தரம் குறித்து கேட்டறிந்து, அங்கு வழங்கப்பட்ட உணவை சாப்பிட்டுப் பார்த்தார்.*

*அரசுக் கல்லூரி மாணவர்கள் விடுதி, அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்கள் விடுதிகளில் உணவின் தரம் குறித்து விடுதி மாணவர்களிடம் கேட்டறிந்து, கழிவறைகளையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.*

*பெரம்பலூரில் பள்ளி மாணவர்களின் கோரிக்கையை ஏற்று விளையாட்டு உபகரணங்களை உடனடியாக வாங்கி வந்து அவர்களுக்கு வழங்கினார்.*

*கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சியர் க.கற்பகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*பெரம்பலூர், அரியலூர் மாவட்ட இளைஞரணி சார்பில் ஒருகோடி நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இதில் முதற்கட்டமாக ரூ.25 லட்சத்திற்கான காசோலை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்பட்டது. இதில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*



திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றியம் தாதன்திருவாசல் தொடக்க பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கழக விவசாய அணிச் செயலாளரும் தமிழ்நாடு அரசு சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கோட்டூர் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பால.ஞானவேல், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், ஒன்றிய தலைவர் மணிமேகலை முருகேசன், துணைத் தலைவர் விமலாரவிச்சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஜி.ஆனந்தன் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பு அணிகளின் ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைவர் ஜாபர் சாதிக் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் என்.ஏ.அயூப் முன்னிலையில் ஈரோடு இளையகோபால், மொழி போர் தியாகி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் வருகிற டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டில் அனைவரும் திரளாக கலந்து கொள்வதெனவும், கழக தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் 6வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தலைவருக்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவித்தார்கள். கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### உப்பிலியாபுரம் ஒன்றிய முன்னாள் செயலாளர்

# அர.நடராஜனின் புதல்வர் அர.ந.அரவிந்தன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30-

உப்பிலியாபுரம், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவரும், முன்னாள் ஒன்றியச் செயலாளருமான பச்சப் பெருமாள்பட்டி அர.நடராஜனின் இரண்டாவது மகனும் உப்பிலியாபுரம் பி.சந்திரசேகரனின் மருமகனும் உப்பிலியாபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அர.ந.அசோகனின் அண்ணனுமாகிய அர.ந.அரவிந்தன் நேற்று முன்தினம் (28.8.2023 - திங்கட்கிழமை) மாலை மூன்று மணிக்கு இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.





திருப்பூர் மாநகராட்சி, 41வது வார்டு, முருகம்பாளையம் நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தொடங்கி வைத்தார். இதில் பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நிலவுப் பரப்பு ஆய்வும், காலை உணவுத் திட்டமும்:

# வரலாற்றுச் சாதனை என்பது என்ன?

## 'மின்னம்பலம்' இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**செ**ன்ற வாரம் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்தன; ஊடகங்களில் கவனம் பெற்றன. ஒரு நிகழ்வு அகில இந்திய ஊடகங்களில் தொடர்ந்து முன்னிலைப்படுத்தப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு இந்தியர்களால் கொண்டாடப்பட்டது; மற்றொரு நிகழ்வு தமிழ்நாட்டு ஊடகங்களில் பகிரப்பட்டது, முற்போக்கு சிந்தனை கொண்டவர்களால் பாராட்டப்பட்டது, அரசியல் நோக்கர்களால் கொண்டாடப்பட்டது.

**முதல் நிகழ்வு சந்திரயான் 3 என்று அழைக்கப்பட்டு நிலவுப் பரப்பை நோக்கி செலுத்தப்பட்ட விண்கலத்திலிருந்து, நிலவுப் பரப்பில் ஆய்வு செய்யும் தானியங்கிக் கலம் நிலவின் பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கிய நிகழ்வு ஆகும்; இரண்டாவது நிகழ்வு, தமிழ்நாட்டின் 37,000 அரசுப் பள்ளிகளிலும் பதினேழு லட்சம் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் திட்டம் மாநிலமெங்கும் தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வு. இரண்டு நிகழ்வுகளுமே வரலாற்றில் இடம் பெறும் முக்கிய நிகழ்வுகள்தாம் என்பதில் ஐயமில்லை. இரண்டுமே பாராட்டுக்கும், பெருமிதத்துக்கும் உரியவைதான்.**



குறிப்பாக சந்திரயான் எனப்படும் வரிசையில் ஒன்று, இரண்டு, மூன்று என வரிசையாக விண்கலங்களை அனுப்பும் திட்டங்களை எல்லாம் தலைமை தாங்கி நடத்துபவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாகவும், எளிய பின்னணியிலிருந்து கல்வியின் மூலம் இந்தப் பதவிகளை அடைந்தவர்களாகவும்



இருப்பது தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமிதத்தை வழங்கியுள்ளதையும் காணலாம்.

ஆனால், இந்த இரண்டு நிகழ்வுகளையும், நிலவுப் பரப்பு ஆராய்ச்சி, காலை உணவுத் திட்டம் ஆகிய இரண்டையும் நாம் எப்படிப் புரிந்துகொள்கிறோம், எதற்காகக் கொண்டாடுகிறோம், எத்தகைய வார்த்தைகளால் கொண்டாடுகிறோம் என்பதெல்லாம் முக்கியமானவை. அதைக் குறித்துச் சிந்தித்தால்தான் எது வரலாறு, எது நம்முடைய முக்கியமான சாதனை என்பதைக் குறித்தெல்லாம் தெளிவு பெற இயலும்.

ஒரு வேளை மகாத்மா காந்தி போன்ற ஒரு தலைவர் பிரதமராக இருந்திருந்தால் நலிவுற்ற பிரிவினரின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க காலை உணவு கொடுப்பதை வரலாற்றின் மிகப்பெரிய சாதனை என்று முதன்மைப் படுத்தி கொண்டாடி இருக்கலாம். வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் நேராகச் சென்னைக்கு வந்து அரசுப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுடன் காலை உணவு உண்டிருக்கலாம். பின்னர் பெங்களூரு சென்று இஸ்ரோ அறிவியலாளர்களைச் சந்தித்திருக்கலாம்.

### நிலவுப் பரப்பு ஆராய்ச்சி

நிலவுப் பரப்பு ஆராய்ச்சி என்பது கடந்த அறுபதாண்டுக் காலமாக பல்வேறு நாடுகளும் மேற்கொண்டு வரக்கூடியது. இப்போது நாம் கணினி சார்ந்து தரவுகளையும், காணொலிகளையும், ஒளிப்பதிவுகளையும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் சுலபமாக அனுப்ப இயல்வதால், தானியங்கி விண்கலங்கள் மூலம் விண்வெளி ஆராய்ச்சி கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தியா இத்தகைய தானியங்கி செயற்கைக் கோள்களை அல்லது பயணிகளை நிலவுக்கும், செவ்வாய் கிரகத்துக்கும் அனுப்பும் திட்டங்களைக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. அதற்கு முன்னம் இருந்தே செயற்கைக் கோள்களை பூமியைச் சுற்றிய பாதையில் ஏவுகணைகள் மூலம் நிலைநிறுத்துவதில் கணிசமான திறன் பெற்று, குறைந்த செலவில் அதைச் செய்வதால் பல்வேறு நாடுகளுடனும் வணிக ரீதியான ஒப்பந்தங்கள் மூலம் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது.

இந்த இடத்தில் நாம் அறிவியலுக்கும் தொழில்நுட்பத்துக்கும் உள்ள மெல்லிய இடைவெளியையும் கணக்கில் கொள்ள வேண்டும். அறிவியல் என்பது இயற்கையின் பல்வேறு அம்சங்களைக் குறித்த கோட்பாட்டு அறிவினை உருவாக்குவது. தொடர்ந்த ஆய்வுகள் மூலம் பல்வேறு புதிய கூறுகளை, சாத்தியங்களைக் கண்டறிவது. தொழில்நுட்பம் என்பது கருவிகளை உருவாக்கி இயக்குவது. கருவிகளின் வடிவமைப்பிலும், செயல்திறனிலும் தொடர்ந்து முன்னேற்றம் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். இவை தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதாகவே கருதப்படும்.

**சந்திரயான் 3 வெற்றி பெற்றதை நாம் பாராட்டுகிறோம், கொண்டாடுகிறோம் என்றால் அதற்கு முக்கிய காரணம் நாம் உயர் தொழில்நுட்பத்தை, நுண் தொழில்நுட்பத்தைத் திறம்பட கையாள்வதில் நம் திறனை நிரூபி த்துள்ளோம் என்பதாகும். நிலவில் தானியங்கியை தரையிறக்கிய நாலாவது நாடு நாம் என்பது நமக்கு உற்சாகமளிக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் நாமும் இந்த சாதனையை செய்துள்ளோம் என்பதால் மகிழ்கிறோம்.**

### மூட நம்பிக்கையும், தேசிய பெருமிதங்களும்

**ஆனால், சந்திரயான் 3 நிலவில் தரையிறங்கும் அன்று ஊடகங்களில் பரவிய காட்சிகள் பலவும் அதிர்ச்சியளித்தன. நாட்டின் பல பகுதிகளிலும், ஏன் அமெரிக்காவில் கூட, இந்தியர்கள் இந்த முயற்சியின் வெற்றிக்காக யாகங்கள் செய்தார்கள். பூஜைகள் செய்தார்கள், பிரார்த்தனைகள் செய்தார்கள். ஒரு அறிவியல் தொழில்நுட்பச் செயல்பாடு வெற்றி பெற இதுபோன்ற மூட நம்பிக்கை செயல்பாடுகளில் மக்கள் ஈடுபடுவது அறிவியலையே கேலிக் கூத்தாக்குகிறது.**

**அறிவியல் என்பது இறை நம்பிக்கையை மறுக்க வேண்டியதில்லை. அண்டவெளியின் புதிர்கள் எல்லையற்று நீளும்போது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஓர் இயற்கை சக்தி இருக்கிறது, அதுவே மனிதர்களை**

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



**யும் இயக்குகிறது என அறிவியலாளர்களும் நினைக்கலாம். பல அறிவியலாளர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்கள்தான். அதில் தவறில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது போல ஒரு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியை எண்ணுவதிலும், அதை ஏதோ ஒரு வடிவத்தில் வழிபடுவதும் கூட இயல்பானது தான்.**

ஆனால், தேர்வில் வெற்றி பெற தேங்காய் உடைப்பதாலும், யாகங்கள் செய்து வேண்டுவதாலும் அந்தச் சக்தி நம் செயல்களில் வெற்றி தேடித்தரும் என்று நினைப்பது அப்பட்டமான மூட நம்பிக்கை. இறை நம்பிக்கை வேறு, மூட நம்பிக்கை வேறு. அறிவியல் மனோபாவம் என்பது நமது கட்புலனுக்கு உட்பட்ட இயற்கையை ஆராய்வது. அதற்கும் வெற்றிக்காக தேங்காய் உடைக்கும், யாகம் செய்யும் மனோபாவத்துக்கும் தொடர்பு கிடையாது. வெற்றி பெற்ற பின் நன்றியுணர்வில் காணிக்கை செலுத்துவது கூட இறை வழிபாடு என நினைக்கலாம். ஆனால், என் செயல்களில் வெற்றி கொடு என நெருப்பிலே நெய்யை ஊற்றி யாகம் வளர்ப்பது பண்படாத, முதிர்ச்சியற்ற மானுட செயலாகும். பெரியாரையும், அண்ணாவையும் புரிந்துகொண்டவர்கள் இந்த மூடநம்பிக்கை செயல்களைச் செய்ய மாட்டார்கள். அதுதான் பகுத்தறிவு.

இரண்டாவது கட்டுக்கடங்காத தேசிய பெருமிதம். இந்தியா நிலவை வெற்றிகொண்டு விட்டது, அமெரிக்கா வாயைப் பிளக்கிறது, ரஷ்யா தோற்றோடியது, சீனா பிரமிக்கிறது என்றெல்லாம் கற்பனையை ஓடவிட்டு புளங்காகிதம் அடைவது. எப்படி யாகம் செய்வதால் கடவுள் சந்திரயானை செய்து தரவில்லையோ, அதேபோலத்தான் இந்த ஒட்டுமொத்த தேசிய பெருமிதத்துக்கும் அறிவியல் தொழில்நுட்ப முயற்சிகளுக்கும் தொடர்பு கிடையாது.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்கித் தருவதுடன் அரசின் பணி முடிந்துவிட்டது. இந்த இஸ்ரோவை உருவாக்கியது, ஏவுகணைத் தொழில்நுட்பத்தை வளர்த்தது, கணினி தொழில்நுட்பத்தை கால்கொள்ள செய்தது, சந்திரயான், மங்கள்யான் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியது என இந்திய அரசு தொடர்ந்து இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாகத்தான் உள்ளது. அப்படித்தான் இருக்க வேண்டும். அது எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் தவிர்க்கவியலாதது.

**ஆனால், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், மன்மோகன் சிங் ஆட்சியில் இதுபோன்ற முயற்சிகள் வெற்றி பெறும்போது இந்த தேசியப் பெருமிதம் எல்லை மீறிய பிதற்றலாக, கூச்சலாக மாறியதில்லை. இப்போது பா.ஜ.க. ஆட்சியில் எது நடந்தாலும் அதை தேசபக்தி கூச்சலாக மாற்ற அக்கட்சி ஊடகங்களையும், தங்கள் சமூக வலைதள அணிகளையும் தூண்டுகிறது. பிரதமரின் தனிப்பட்ட சாதனையாக இதைக் காட்டவும் தொடர்ந்து முயற்சிகள் நடக்கின்றன. அவரும் மூட நம்பிக்கையாளர்களுக்கு அனுசரணையாக நிலவில் தரையிறங்கிய இடத்துக்கு சிவசக்தி என்று பெயரிடுகிறார்.**

### காலை உணவுத் திட்டம் என்ற புதிய வரலாற்று சகாப்தம்



மாநிலமெங்கும் உள்ள அரசுப் பள்ளிகளில் காலை உணவை வழங்குவது என்பது அரசு ஏதோ நிதி ஒதுக்கும் சங்கதியல்ல. இது போன்ற ஒரு திட்டத்தை செயல்படுத்த மிகப்பெரிய அரசியல் விருப்புறுதி (Political will) தேவை. ஏனென்றால், இது ஒருமுறை நிகழும் காரியமல்ல. இந்தத் திட்டத்தை துவங்கிவிட்டால் அதை நாள்தோறும் தொடர்ந்து நடத்திக் காண்பிக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கானோரின் ஈடுபாடும், உழைப்பும் தேவை.

இந்தத் திட்டத்துக்கும் ஒரு முன் வரலாறு உண்டு. அதை அரசே முன்வந்து சுட்டிக்காட்டுகிறது. நீதிக்கட்சி ஆட்சியிலே சென்னையில் தொடங்கிய மதிய உணவு, கல்விக் கண் தந்த காமராஜர் காலத்தில் செயல்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர் காலத்திலே விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் ஒரு திருப்புமுனை. ஏனெனில் இது அனைத்து அரசுப் பள்ளிகளையும் உள்ளடக்கி, அந்தந்த பள்ளிகளிலேயே சத்துணவு கூடங்களை அமைத்து, பணியாளர்களை நியமித்து உணவு வழங்கியது. அதைத் தொடர்ந்து திராவிட நவயுக சிற்பி கலைஞர் சத்துணவை மேம்படுத்தினார்.

**இந்த முயற்சிகளின் தொடர்ச்சிதான் என்றாலும் முற்றிலும் புதியதொரு சகாப்தம் காலை உணவுத் திட்டம். தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாக சில குறிப்பிட்ட பகுதிகளில் செயல்படுத்த முயன்ற காலை உணவுத் திட்டத்தை அரசே முன்வந்து அனைத்து அர**



**சுப் பள்ளிகளிலும் வழங்குவது ஒரு துணிகர முன்னெடுப்பு என்றால் மிகையாகாது. முதல்வர் ஸ்டாலினின் அரசியல் விருப்புறுதி இந்தத் திட்டத்தின் அச்சாரமாக விளங்கியுள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி. திராவிட மாடல் தொடர்ந்து இந்தியாவுக்கு வழிகாட்டும் என்பதற்கான சான்று.**

### மனித வளமே மானுட முன்னேற்றம்!

காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாணவர் வருகை கூடியுள்ளது. இடைநிற்றல் என்பது குறையும். கல்வியில் ஆர்வமும், மேம்பாடும் நிகழும். எளிய மக்களுக்குக் கல்வி சென்று சேரும்போதுதான் ஒட்டுமொத்த சமூகத்தின் அறிதல் திறன், சிந்திக்கும் திறன் ஆகியவை மேம்படும். அதுதான் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்கும்.

நிலவின் பரப்பில் நாம் காணக்கூடிய எந்த ஒரு கனிமமோ, பயனுள்ள பொருளோ காலப்போக்கில் மானுடர் வாழ்வை மேம்படுத்த உதவலாம். அது நீண்ட கால சாத்தியம். ஆனால் ஏற்கனவே மானுடம் உருவாக்கியுள்ள வளங்கள் இன்னும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்னும்போது மேலும், மேலும் வளர்ச்சியடைவது என்பதன் பொருள் என்ன?

**இங்கேதான் வரலாறு என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. வரலாறு என்பது யாரோ சிலர் செம்மாந்து வாழ, பலர் தங்கள் உழைப்பையும், வாழ்வையும் செலவிடுவது அல்ல. அது பண்டைய கால அடிமைச் சமூகம். கையிலும் காலிலும் ஆயிரக்கணக்கானோர் விலங்கிடப்பட்டு, உழைத்து ஓய்ந்து மாய வேண்டும், அந்த உழைப்பின் பலன்களை சீமான்கள் சிலர் அனுபவிக்க வேண்டும் என்பது மானுடத்தின் முதிரா பருவம்.**

**அதிலிருந்து விடுதலை பெற்று, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய கோட்பாடுகளை உருவாக்கி, மக்களாட்சி என்பது மக்களே தங்களை ஆண்டுகொள்வது என்று சிந்திக்கும் நிலைக்கு வந்ததைத்தான் நாம் வரலாறு என்கிறோம். அந்த வரலாற்றின் லட்சியம் மானுடத்தின் ஒட்டு மொத்த வளங்களும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு, வளர்ச்சி என்பது அனைவரது வளர்ச்சியாகவும் மாறுவதுதான்.**

இமயத்தில் ஏறி விட்டோம், ஆழ்கடல் பரப்பை அளந்துவிட்டோம், விண்ணிலே பயணம் செய்கிறோம், நிலவுப் பரப்பில் கால்பதித்துவிட்டோம் என்பதெல்லாம் மானுடரின் திறனுக்கு அடையாளமாகலாம். ஆனால், மானுடரின் பண்பாட்டு வளர்ச்சி என்பது அனைத்து மானுடரின் மேம்பாடு என்பதேயாகும். 'வெள்ளிப் பனி மலையின் மீது உலாவுவோம்' என்று பாடிய கவிஞன்தான் 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்றும், 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!' என்றும் பாடினான். ஒன்றுக்காக மற்றொன்று காத்திருக்க வேண்டும் என்பதில்லை. ஏழ்மை முற்றிலும் நீங்கிய பின்புதான் விண்வெளிக்குப் பயணிக்க வேண்டும் என்று கூறவில்லை.

**ஆனால் நாம் வரலாற்றின் முன்னகர்வு, தேசிய வாழ்வின் முன்னகர்வு, முன்னேற்றம் என்று எதனைக் கொண்டாடுகிறோம், எதனால் சிலிர்ப்படைகிறோம், எதனால் பெருமிதம் கொள்கிறோம் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். நம்முடைய மானுட உணர்வு எத்தகையது என்பதை நாமே புரிந்துகொள்ளும் தருணம் அதுதான்.**

**அந்த வகையில் நான் பெருமிதம் கொண்ட காட்சி நமது முதல்வர் மாணவர்களோடு அமர்ந்து காலை உணவை உண்டு அந்த மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்த காட்சிதான். அதுதான் என் கண்களில் நீர்த்திரையிட காரணமானது. அதுதான் நான் தமிழன், இந்தியன் என்று பெருமிதம் கொள்ளச் செய்தது.மானுடனாக மனம் விம்மச் செய்தது.**

நிலவின் பரப்பில் விண்கலம் இறங்கியதில் நான் மகிழ்ந்தேன். அதற்காக நம் அறிவியலாளர்களை மனமார பாராட்டுவேன். ஆனால், இஸ்ரோ அறிவியலாளர், சந்திரயான் 3 திட்ட இயக்குநர், வீரமுத்துவேல் போல ஆயிரம் எதிர்கால சாதனையாளர்கள் இன்று காலை உணவை உண்பதைக் காண்கிறேன். அதுவே வரலாற்றின் மகத்தான அசைவாக என் கண்களுக்குத் தெரிகிறது.

**வெல்க காலை உணவுத் திட்டம்! வெல்க முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசியல் விருப்புறுதி! மக்கி மண்ணாகட்டும் மூட நம்பிக்கை கூடாரங்கள்! வளரட்டும் உண்மை அறிவியல் கண்ணோட்டம்! முன்னேறட்டும் திராவிடம் கழகம் காட்டும் நற்பாதையில்!**

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.8.2023) முகாம் அலுவலகத்தில், ஹஜ் புனித பயணம் செல்வதையொட்டி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தனது மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்து, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, UPS நிறுவனத்தின் உலகளாவிய தலைமை டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பாலசுப்ரமணியன், தலைமை மனித வள அலுவலர் டேரல் ஃபோர்டு, இந்தியாவிற்கான துணைத் தலைவர் சுப்ரமணி ராமகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமத்துவம் – வளர்ச்சி – ஒற்றுமை நிறைந்த

# இந்தியாவை மீட்டெடுக்க உறுதியேற்போம்!

## மலையாளச் சொந்தங்களுக்கு முதல்வர் ஓணம் திருநாள் வாழ்த்து!

சென்னை, ஆக.30-

ஓணம் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “சமத்துவமும் வளர்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்போம்” என குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கேரள மக்கள் அனைவராலும் எழுச்சியோடும் ஒற்றுமையோடும் கொண்டாடப்படும் அறுவடைப் பெருவிழாவாம் ஓணம் திருநாளை முன்னிட்டு மலையாள சொந்தங்கள் அனைவருக்கும் எனது ஓணம் வாழ்த்துகள்!

ஓணத்திருநாள் அன்று, தமிழ்நாட்டில் மலையாள மொழி பேசும் மக்கள் நிறைந்து வாழும் மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களுக்கு 2006ஆம் ஆண்டும், தலைநகர் சென்னைக்கு

2007ஆம் ஆண்டும் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் விடுமுறை அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அறுவடைத் திருநாளாக மட்டுமல்லாமல், வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்ட திராவிட மன்னனான மாவேலியைக் கேரள மக்கள் அன்போடு வரவேற்கும் விழாவாகவும் குறியீட்டளவில் ஓணம் கொண்டாடப்படுகிறது. இத்தகைய ஓணம் திருநாள் சங்க இலக்கியமான மதுரைக்காஞ்சியிலும் “மாயோன் மேய ஓண நன்னாள்” எனச் சிறப்புடன் பாடப்பட்டிருக்கிறது. இவ்வாறு திராவிடப் பண்பாட்டுடன் பிரிக்க முடியாது, இரண்டறக் கலந்துள்ள ஓணத்தையும் விட்டுவைக்காமல், ஒரு தரப்பினர் ‘வாமன ஜெயந்தி’ என அதன் அடையாளத்தைப் பறிக்க முயல்கிறார்கள். கேரள மக்களே இத்தகைய குயுக்தி முயற்சிகளைப் புறக்கணிப்பார்கள்.

மக்களைப் பிளவுபடுத்தி, அதில் குளிர்காய நினைக்கும் சுயநல வஞ்சகர்கள் வீழ்ந்துபடும் ஓணமாக வரும் ஓணம் அமையும் வகையில் நாட்டு மக்கள் விழிப்புணர்வு அடைந்து வருகிறார்கள்.

சமத்துவமும், வளர்ச்சியும், ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்கிற நாளாக இந்த ஓணத் திருநாள் அமையட்டும்! நம் தென்னாட்டு மக்கள் காட்டிய முற்போக்கு அரசியல் பாதையில் ஒட்டுமொத்த இந்தியாவும் பயணிக்கும் ஆண்டாக வருகிற ஆண்டு திகழட்டும்!

திராவிட மொழிக் குடும்பத்தின் உடன்பிறப்புகளான கேரள மக்கள் அனைவருக்கும் மீண்டுமொருமுறை எனது ஓணம் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு!

# இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வரின் பணிகள் நமக்கு எழுச்சியூட்டும்!

## கழகத் தலைவருக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஆக. 30-

கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமது ட்விட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி.,"ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன" என குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி



கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

**பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் கட்டிக்காத்த நம் தி.மு.கழகத்தின் தலைவராக ஐந்தாண்டுகள் சிறப்புற பணியாற்றி, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.**

**இந்திய ஜனநாயகம் கடும் நெருக்கடியைச் சந்தித்து வரும் வேளையில், ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் அவரது அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன.**

இவ்வாறு அவர், தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

### உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் – ஈட்டி எறிதலில்

# தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு பாராட்டு!

## முதல்வர் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 30-

உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம்வென்றமுதல் இந்தியராக வரலாறு படைத்து, இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ள ஈட்டி எறிதல் வீரர் நீரஜ்சோப்ரா அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகள்.**



**உங்களது அர்ப்பணிப்புணர்வும் இமாலய சாதனைகளும் உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவின் நிலையைத் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை ஆக.30-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்இந்தியாவிலேயே முதல்முறையாகதமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தைவிரிவுப் படுத்தி,1முதல்5ஆம்வகுப்பு வரைபயிலும்அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலைஉணவுத்திட்டத்தை காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்அமைச்சர்கள்முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுடன்அமர்ந்துஉணவருந்தினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.8.2023 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தைவிரிவுப் படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும்17இலட்சம்அரசுப் பள்ளி மாணவர்கள் பயன் பெறும்வகையில்தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்குகாலைஉணவுவழங்கும்முதலமைச்சரின்காலை உணவுத் திட்டத்தை தொடங்கிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி முதலமைச்சரின் காலைஉணவுத்திட்டத்தை தொடங்கிவைத்து,மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினார். மேலும் புதுக்கோட்டை மாவட்டம்/ஊராட்சி ஒன்றியம், முள்ளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும்மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வேப்பங்குடி ஊராட்சி, மேலத்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைமாற்றத்துறைஅமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன்முதலமைச்சரின்காலைஉணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து,மாணவ,மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

“நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குகிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பதுமட்டுமல்ல,சிலருடைய குடும்பசூழலும்இதற்குகாரணமாகஇருக்கிறது.இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலைநேரத்தில்சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம்.

அதனடிப்படையில் புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களில்,ஊரகமற்றும்நகர்ப்புற பகுதிகளில் 1,048 துவக்கப்பள்ளிகள், 276 நடுநிலைப்பள்ளிகள், 2 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம்1,326பள்ளிகளில்71,006 மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்தப் பட்டு, அனைவருக்கும் முதலமைச்சரின்காலைஉணவுத் திட்டத்தின் மூலம் காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்நா.கவிதப்பிரியா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்எம்.மஞ்சுளா,புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன்,மாவட்ட ஊரக வளர்ச்சித்துறைசெயற்பொறியாளர் எஸ்.பாலகிருஷ்ணன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) இளங்கோ தாயுமானவன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், புதுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள்ரவிச்சந்திரன் (61.9511.), வே.வேலு(கி.ஊ.),திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன்(கி.ஊ.),ஊராட்சிமன்றத் தலைவர்கள் சிக்கந்தர் (திருமயம்), ஆதீஸ்வரன் (முள்ளூர்),தலைமையாசிரியர்கள்,உள்ளாட்சிஅமைப்புகளின்பிரதிநிதிகள்மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தருமபுரி கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் கலைஞர் நுற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் எதிரில் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு பாடநூல் கழக வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.கூட்டத்தில் மாவட்ட கழக பொருளாளர் வே.தங்கமணி,மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஜி.சேகர், இரா.தாமரைச்செல்வன்,மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் முன்னாள் நகர செயலாளர் மே.அன்பழகன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,சார்பு அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள், அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூரில் 135 குக்கிராமங்களுக்கு 11 நடமாடும் நியாயவிலைக்கடை வாகனத்தை சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர். இரா.இராஜேந்திரன் தொடங்கிவைத்து ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.சி.எம்.செல்வகுமரன். மாவட்ட கவுன்சிலர்கள். அழகிரி, சண்முகம். பொதுக்குழு உறுப்பினர்கள் பி.குப்புசாமி, கருணாகரன். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். அருண் பிரசன்னா, ஊராட்சி தலைவர்கள் கண்ணன், மனோகரன், பாலு, சக்தி ஆகியோர் இருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், காணை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 48 ஊராட்சிகளுக்கு துப்பரவு மின்கல வண்டிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, ஒன்றிய குழு தலைவர் கலைச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, மாவட்ட கவுன்சிலர் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஒன்றிய கவுன்சிலர் ஜெயமாலினி சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் கமல் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



பெரியாரிய அம்பேத்கரிய மார்க்சிய ஆய்வு அறிஞர் எஸ்.வி. இராஜதுரை அவர்களை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.



மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறை சீனிவாசபுரத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞர் அணி மாநில மாநாட்டு நிதியாக ரூ.15 லட்சத்தை இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலினிடம் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் அமைச்சர்கள் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்ததாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, தஞ்சை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்று பலர் உள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் சிவசங்கர் – ஆ.இராசா எம்.பி.– குன்னம் சி.இராஜேந்திரன் – முன்னணியினர் பங்கேற்பு!

பெரம்பலூர், ஆக. 30 -

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்லையான குன்னத்தில் மாவட்டக் கழக செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில் சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதேபோல்

நாண்கு ரோடு சந்திப்பிலும் பெண்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி,

மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ். நல்லதம்பி, தி.மதியழகன், சோமு.மதியழகன், சி. ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி. முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, என்.ஜெகதீஸ்வரன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், பேரூர் கழக செயலாளர்கள் மு. வெங்கடேசன், செல்வலட்சுமி சேகர், ஆர்.இரவிச்சந்திரன, எ.எஸ்.ஜாகீர்உசேன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டு ராசா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கே.சி.ஆர்.குமார், மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வெள்ளுவாடி ரவி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் கே.எம்.ஏ. சுந்தர்ராசு, தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர். ரெங்கசாமி, தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் தலைவர் கே.கே.எம்.குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.இரமேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ம.மணிவாசகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அ.ரசூல்அகமது, எஸ். கே.எஸ்.மருத்துவமனை அதிபர்

டாக்டர் செ.செங்குட்டுவன், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி. மாரிக்கண்ணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் அம்பிகா ராஜேந்திரன், அ. மீனா அண்ணாதுரை, க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை, முத்தமிழ் செல்வி மதியழகன், அருள் செல்வி காட்டுராசா, கு. சாந்தாதேவிகுமார், மு.ரெங்கராஜ், சங்கீதா ரமேஷ், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், வள்ளியம்மை ரவிச்சந்திரன்,கீதா துரைசாமி, எஸ்.சரண்யா குமரன் ,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் உள்ளிட்ட பல ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின் நன்றியுரையாற்றினார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, ஆக. 30 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அவசர செயற்குழு ஆலோசனைக்கூட்டம்செஞ்சியில் நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், பொருளாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செயற்குழு உறுப்பினருமான விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்: முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வருகின்றார். ஒரு தாய்க்கு தாயாக தொலைநோக்கு சிந்தனை யுடன் பள்ளி குழந்தை களுக்கு காலை காலை உணவு திட்டம் செயல்படுத்தி உள்ளார் வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி பேரறிஞர் அண்ணாபிறந்தநாளில் குடும்பத் தலைவிக்கு மகளிர் உரிமை திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் திட்டத்தை அறிவித்து வழங்க உள்ளார்கள். பிஜேபியில் வாக்கு கேட்பதற்கு கூட ஆளில்லாத ஒரு நிலை தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது காரணம் அத்தனை திட்டங்களையும் செயல்படுத்தியஒரு உந்து சக்தி நம்மிடம் உள்ளதாகவும் விலைவாசி உயர்வு வேலையில்லா திண்டாட்டம் விவசாயிகளை வஞ்சித்தபிரதமர் மோடியின் பட்டியல் ஒரு பக்கமும் விவசாயிகளுக்கு பல்வேறு அற்புதமான திட்டங்களை அறிவித்து முதலமைச்சரின் திட்டங்கள் ஒரு பட்டியலாக தேர்தல் களத்தில் நாம் முன்வைப்போம்.தமிழகத்தில் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெறுவோம். சில இடங்களில் பிஜேபியுடன் கூட்டணி வைக்கும் கட்சிகள் டெபாசிட் இழக்கும் நிலை ஏற்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைக்கஇடம் தேர்வு செய்வது எனவும்,

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ,பகுதிகளில் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்ந்து நடத்துவது எனவும்

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில் பாகமுகவர்கள்கூட்டங்கள் நடத்துவது, அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில்இளைஞர் அணி சார்பில் இல்லன் தேடி சென்று அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது,விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மூத்த கழக முன்னோடிகளை தேர்வு செய்துவிழுப்புரம் வடக்கு மாவட்டத்தின் சார்பாக பொற்கிழி வழங்குவது,உலக அளவில் நிலவின் தென் துருவப் பகுதியில் சந்திரயான் 3 வின் கலத்தை கடந்த 23ஆம் தேதி முதன் முதலாக வெற்றிகரமாக ஆராய்ச்சிக்காக இறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும் அந்தத் திட்ட இயக்குனராக செயலாற்றி இந்திய நாட்டிற்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்த விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த வீரமுத்துவேலுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தும்,விளையாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நடந்த உலக செஸ் விளையாட்டு போட்டியில் உலகில் இரண்டாவது இடத்தில் வெற்றி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த இளம் வயது வீரர் பிரக்ஞானந்தாவிற்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீதாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழுஉறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி சின்னராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் செல்வராஜ் ,மணிவண்ணன், வீடுர் ரவி ,சாந்தி ஏழுமலை,ஒன்றிய செயலாளர்கள்விஜயராகவன், பச்சையப்பன்,நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், அண்ணாதுரை, துரை,இளம்வழுதி, மணிமாறன், செழியன், சொக்கலிங்கம், ராஜாராமன், தயாளன், பழனி, ரவிசந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், அனந்தபுரம் பேரூர் செயலாளர் சம்பத்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த்,ராஜசக்தி, அன்சாரி, மொக்தியார் அலி மஸ்தான்,ரவிச்சந்திரன், சக்தி பிரியன், அண்ணாதுரை, கே. செந்தில்குமார், பா. செந்தில் குமார், புலவர் தமிழரசன், கோ. தமிழரசன், சந்திரன், விஜய ராகவன், சிவகாமி, திண்டிவனம்நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், அனந்தபுரம் பேரூர்தலைவர் முருகன்,செஞ்சி துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ,கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1 /2432/2023

**ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**Purchasing of toners for canon model printers available at various locations for Greater Chennai Corporation for a period of one year**- க்கான ஒப்பம்.

| பணியின் மதிப்புத் தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| 1,09,82,354/- | 1,09,824/- |

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் **சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 21.09.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **22.09.2023 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 4780 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


# நடிகர் வடிவேலுவின் தம்பி ஜெகதீஸ்வரன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30 -

நடிகர் வடிவேலுவின் தம்பி மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திரைக்கலைஞர் வடிவேலு அவர்களின் தம்பியான ஜெகதீஸ்வரன் (52) அவர்கள் உடல்நலக் குறைவின் காரணமாக உயிரிழந்தார் என்று அறிந்து வருந்துகிறேன்.

உடன்பிறந்த உற்ற துணையான தன் தம்பியை இழந்து வாடும் வடிவேலு அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**முதலமைச்சர் அவர்கள் நடிகர் வடிவேலுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகர் வடிவேலுவை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு அவரது தம்பி மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து ஆறுதல் கூறினார்.



திருச்சி மாவட்டம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தொட்டியத்தில் கொங்குநாடு கல்லூரியில் நடைபெற்ற ஊடகமின்றி அமையாது உலகு என்ற விழாவில் வடக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காடுவெட்டி தியாகராஜன் உரையாற்றினார்.

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்பு!

# நாகை மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை. ஆக. 30 -

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை வருமாறு:



நாகை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் வரும் 01.09.2023 வெள்ளிகிழமை காலை 10.00 மணிக்கு நாகை வெளிப்பாளையம் எஸ்.பி. அலுவலகம் அருகே உள்ள யாழிசை திருமண மண்டபத்தில் என் தலைமையில் நடைபெறுகிறது. கலந்துரையாடல் கூட்டத்தில் நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரான எஸ்.இரகுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளைச் சேர்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்.

கலைஞர் நூற்றாண்டு விழா சார்பு அணிகளின் சார்பில் கொண்டாடுவது.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர்

# அர.ந.அசோகனின் சகோதரர் அர.ந.அரவிந்தன் மறைவு!

### அமைச்சர் கே.என்.நேரு அஞ்சலி!

திருச்சி, ஆக. 30 -

திருச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உப்பிலியபுரம் முன்னாள் ஒன்றிய செயலாளரும் அர. நடராஜன் இரண்டாவது மகனும், உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அர. ந. அசோகனின் அண்ணனுமான அர. ந. அரவிந்தன் நேற்று முன் தினம் (28.8.2023 - திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (29.8.2023) மதியம் 2.00 மணியளவில் துறையூர் அம்மாபட்டி ரோடு தேவாங்கர் நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முதன்மைச் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே என் நேரு, அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும் வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன் , மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நகரச் செயலாளர் முரளி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, முத்துச்செல்வன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக் கஷ்டமஸ் மகாலிங்கம், கிட்டப்பா, ரெங்கநாதபுரம் கார்த்தி உட்பட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினர்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, பகுதிகளில் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பப் பதிவு முகாமினை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தகுதியும், முன் அனுபவமும் இல்லாத போதிலும்

# அதானியிடம் ஒப்படைக்கப்பட்ட 'பாரத்மாலா' திட்டங்கள்!

பிரதமரின் நெருக்கம் இருந்தால் போதும் கனவிலும் நினைக்காத திட்டங்களும் கிடைக்கும் என்பது ஒன்றிய பா.ஜ. அரசின் சித்தாந்தமாக மாறிவிட்டதோ என்று ஐயப்படுகின்ற அளவுக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறார் அதானி. எதிர்க்கட்சிகள் தரப்பில் எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் அதையெல்லாம் புறங்கையால் தள்ளிவிட்டு, கர்ண பரம்பரையில் வந்தவர்களைப்போல, அதானி மற்றும் பா.ஜ.வுக்கு தாராள நிதி தரும் தொழிலதிபர்களின் நிறுவனங்கள், பா.ஜ. முக்கிய பிரமுகர்களின் நிறுவனங்களுக்கு தகுதியில்லாத போதிலும் திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இந்த வரிசையில் சமீபத்தில் சேர்ந்திருப்பது பாரத் மாலா திட்டம்.

நாட்டின் எல்லைப் பகுதிகள், கடலோரப் பகுதிகள், துறைமுகங்கள், சுற்றுலா தலங்கள், 100 மாவட்ட தலைமையகங்கள் ஆகியவற்றை இணைக்கும் 34,800 கி.மீ. நீள சாலை அமைப்பது தான் பாரத் மாலா திட்டத்தின் நோக்கமாகும். நாட்டின் மிகப்பெரிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் ஒன்று என்பதால் தகுதி வாய்ந்த, முன் அனுபவம் பெற்ற நிறுவனங்களுக்கு தான் இந்த திட்டம் வழங்கப்பட வேண்டும் என்பது காலம் காலமாக இருந்து வந்த நடைமுறை. ஆனால், பாரத் மாலா திட்ட பணிகள் ஒப்படைக்கப்பட்டது தொடர்பாக சி.ஏ.ஜி. வெளியிட்ட அறிக்கை, முறைகேடுகள், விதி மீறல்களின் உச்சத்தை பிரதிபலிப்பதாகவும், கடும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. காரணம், அனுபவமும், தகுதியும் இல்லாத போதும் அதானி நிறுவனங் களுக்கும் பா.ஜ.வுக்கு தாராள கட்சி நிதி வழங்கிய மற்றும் பா.ஜ. தலைவர்களின் நிறுவனங்களுக்கும் விதிகளை மீறி திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன.


உதாரணமாக, அதானி டிரான்ஸ்போர்ட் தலைமையிலான நிறுவனங்களின் கூட்டமைப்பில் உள்ள சூர்யபேட் கம்மம் ரோடு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு தெலங்கானாவில் உள்ள சூர்யபேட் மற்றும் கம்மம் இடையிலான நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவ னத்திற்கு நெடுஞ்சாலை அமைக்கும் பணியில் கொஞ்சம் கூட முன் அனுபவம் இல்லை. இதேபோன்று தான், பி.என்.ஆர். இன்போடெக் என்ற உள்கட்டமைப்பு நிறுவனத்திற்கு லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி 2019ம் ஆண்டு ஆகஸ்ட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான மதிப்பீட்டு செலவு, நிர்ணயித்திருந்ததை விட 17.44 சதவீதம் அதிகம். இது மட்டுமின்றி மறுமதிப்பீட்டிலும் திட்டச் செலவு 2.02 சதவீதம் அதிகரித்துவிட்டது. இந்த நிறுவனம் பா.ஜ. தலைவர் நவீன் ஜெயின் என்பவருக்குச் சொந்தமானது. திட்டப்பணி ஒப்படைக்கப்பட்ட போது ஆக்ரா மேயராக இருந்தவர் தான் நவீன் ஜெயின். இதேபோன்று, ஐ.ஆர்.பி. இன்ஃப்ரா ஸ்டிரக்சர் டெவலப்பர்ஸ், ஜெ குமார் இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ், லார்சன் அண்ட் டூப்ரோ மற்றும் எம்கேசி இன்ப்ரா ஸ்டிரக்சர் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும் பாரத் மாலா திட்டப்பணிகள் ஒப்படைக்கப்பட்டதில் விதிகள் மீறப்பட்டு முறைகேடு நடந்துள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. இவ்வாறு விதிகளை மீறி திட்டப் பணிகளை ஒப்படைத்ததற்கு காரணம், இந்த 4 நிறுவனங்களும் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.77 கோடி கொடுத்திருக்கின்றன என்று குற்றம் சாட்டப்படுகிறது.

**அதானி தலைமையில் இணைந்த நிறுவனங்கள்**

திட்டப் பணிகளுக்கு விண்ணப்பித்த நிறுவனங்களின் கூட்டமைப்பில் அதானி நிறுவனம் வைத்துள்ள பங்கு 74 சதவீதம். இவ்வாறு நெடுஞ்சாலைத்துறை பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அந்தத் துறையில் குறைந்த பட்சம் 6 ஆண்டுகளாவது அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத, நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட சாலை பணிகளில் ஈடுபட்டிராத அதானி நிறுவனம் தான் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் பெற்றுள்ள நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கு தலைமை ஏற்றுள்ளது.

அதாவது அதானி நிறுவனத்துக்கு சாலை பணிகளில் அனுபவம் இல்லாதபோதும், பிறதுறை நிறுவனங்களுடன் இணைத்து சம்பந்தப்பட்ட துறை அனுபவங்களை தனதாக்கி எந்த வகையிலாவது சம்பந்தம் இல்லாத திட்டங்களை கூட டெண்டர் எடுத்து விடுகிறது.




இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்.எச்.ஏ.ஐ) திட்டத்தின் மொத்த செலவினத்தில் 40 சதவீத பங்களிப்பை வழங்கும். எஞ்சிய 60 சதவீதம் சாலை மேம்பாட்டு திட்டப் பணியில் ஈடுபடும் நிறுவனம் ஏற்க வேண்டும். இந்த 60 சதவீதத்தில் 20 முதல் 25 சதவீத தொகையை தன்னிடம் இருந்த நிதியிலிருந்து எடுத்துக்கொண்டு எஞ்சிய தொகையை வங்கிகளில் கடனாக பெறுவது வழக்கம்.

**குறைந்த பிரீமியம் குறிப்பிட்டும் கைமாறிய டெண்டர்**

லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி பணிக்கு கடந்த 2019 மார்ச் 7ம் தேதி டெண்டர் வெளியிடப்பட்டிருந்தது. திட்ட மதிப்பீடாக ரூ.904.31 கோடி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதைவிட அதிகமாக ரூ.1,062 கோடி மதிப்புக்கு பி.என்.சி. இன்போடெக் நிறுவனத்திற்கு திட்டப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது முதலில் நிர்ணயித்த தொகையை விட 17.44 சதவீதம் அதிகமாகும். இந்த ஐ.ஆர்.பி. இன்ஃப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக கடந்த 2013ம் ஆண்டு முதல் இதுவரை ரூ.65 கோடி வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் ஹாப்பூர் பைபாஸ் - மொராதாபாத் நெடுஞ்சாலை திட்டப் பணியை ஏற்றுள்ளது.

அதுவும் 68 சதவீதம் குறைந்த பிரீமியத்துக்கு எடுத்துள்ளது. அதாவது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தத் திட்டத்திற்கு டெண்டர் வெளியிடும் போது, சாலை திட்டத்தை முடித்த பிறகு அரசுக்கு இந்த நிறுவனம் ஆண்டு பிரீமியமாக ரூ.97.99 கோடி செலுத்த வேண்டும். பின்னர், 22 ஆண்டுகளுக்கு சுங்க கட்டணமாக வசூலித்துக் கொள்ளலாம். ஆனால், 2018ம் ஆண்டில், இந்த நிறுவனம் சமர்ப்பித்த டெண்டரில் ஆண்டு பிரீமியமாக ரூ.31.5 கோடி மட்டுமே வழங்குவதாக குறிப்பிட்டிருந்தும், நெடுஞ்சாலை ஆணையம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. திட்டப் பணி நடைபெற உள்ள சாலையில் செல்வதாக உத்தேசிக்கப்படும் வாகன போக்குவரத்து மற்றும் விரிவான திட்ட அறிக்கையின்படி உள்ள மொத்த விலை புள்ளி அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

அதேநேரத்தில், ஐ.ஆர்.பி. நிறுவன இணையதளத்தில் மேற்கண்ட திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ.3,345 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளாகவே இந்த முடிவுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வந்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் தவறுகள் இருந்த போதிலும் எந்த ஒரு நியாயமான காரணமோ அல்லது மறு டெண்டர் விடுவதற்கான முயற்சியிலோ ஈடுபடாமல் அவசரகதியில் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டது குறித்து சிஏஜி அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் திட்டத்தை வடிவமைத்து அதனை கட்டி முடித்து இயக்குவது மற்றும் ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட கால அளவு வரை சோதனை சாவடி மூலம் வருவாய் ஈட்டிக் கொள்வது பின்னர் அரசிடம் திட்டத்தை ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தான் மேற்கண்ட திட்டம் டெண்டர் விடப்பட்டுள்ளது. ஐ.ஆர்.பி. இன்ப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் கடந்த 2020-21 நிதியாண்டில் பா.ஜ.வுக்கு ரூ.20 கோடியும் இதனுடன் தொடர்புடைய 3 நிறுவனங்கள் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை ரூ.45 கோடியும் கட்சி நிதியாக வழங்கியிருக்கின்றன. கட்சி நிதியும். அதானியுடன் கூட்டும் தகுதியாகுமா? கடந்த 2018 டிசம்பர் மாதம் ஜெ குமார் இன்ப்ரா ப்ரா ஜெக்ட் நிறுவனம் துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தின் ஒரு பகுதியை ரூ.1,349 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் எடுத்திருந்தது.

இந்தத் திட்டப் பணியை கைக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் சுரங்கப்பாதை அமைப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத இந்த நிறுவனம் திட்ட பணியை கைப்பற்றியுள்ளது. இந்த நிறுவனம் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கி இருக்கிறது. இதுபோல் 2017-18 நிதியாண்டில் ரூ.5.25 கோடி, 201516 நிதியாண்டில் ரூ.1 கோடி மற்றும் 2013-14 நிதியாண்டில் ரூ.21 லட்சம் கட்சி நிதியாக வழங்கி இருக்கிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக ராகு சந்திரா உள்ளார். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவராக 2015ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார்.

மேலும் ஜி.ஆர். இன்ப்ரா ஸ்டிரக்சர் ப்ராஜெக்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜி.ஆர். ஹைவேஸ் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர் நிறுவனத்துக்கு கூடுதல் இயக்குனராகவும் இருந்தவர். இதுபோல் வெல்ஸ்




புன் என்டர்பிரைஸ் நிறுவன இயக்குநராகவும் உள்ளார். அதானி குழுமமும் வெல்ஸ்புன் நிறுவனமும் இணைந்து அதானி வெல்ஸ்புன் துரப்பன நிறுவனம் என்ற பெயரில் எரிவாயு துரப்பன பணிகளில் ஈடுபட்டுள்ளன. இது தவிர ஜெ குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனம் மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வர்த்தகம் செய்து வருகிறது. மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனம் வெல்ஸ்புன் என்டர்பிரைசில் 50.10 சதவீதம் பங்கினை கொண்டுள்ளது. ஜெ குமார் நிறுவனம் பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கியுள்ளது.

இதுஒருபுறம் இருக்க, ஜெ குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனத்தை மும்பை மாநகராட்சி கடந்த 2016ம் ஆண்டு தடைப் பட்டியலில் வைத்திருந்தது. 2015ம் ஆண்டு நடந்த சாலை திட்ட ஊழல் விவகாரத்தை தொடர்ந்து இந்த முடிவை மும்பை மாநகராட்சி அப்போது எடுத்திருந்தது. கடந்த 2021ம் ஆண்டு மும்பையில் பாலம் ஒன்று இடிந்து விழுந்து நொறுங்கியது. இந்த பாலம் ஜெ குமார் நிறுவனத்தால் கட்டப்பட்டது. இந்த நிறுவனத்துக்கு திட்டத்தை வழங்கியதற்கு, பா.ஜ. தலைமையிலான அப்போதைய மகாராஷ்டிர அரசை எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தனர்.

*எம்.கே.சி. இன்ப்ராஸ்டிரக்சர் மற்றும் லார்சன் அண்ட் டூப்ரோ டெல்லி - வதோதரா இடையிலான விரைவு சாலை திட்டத்தில் ஜியாங் சி கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், எம்.கே.சி. இன்ப்ராஸ்ஸ்டிரக்சர், ஜி.ஆர். இன்ப்ரா ப்ராஜெக்ட்ஸ், லார்சன் அண்ட் டூப்ரோ (எல் அண்ட் டி) மற்றும் ஜி.எச்.வி. இந்தியா ஆகிய நிறுவன ங்களின் கூட்டமைப்புக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் டெண்டர் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது. இந்த நிறுவனங்களில் லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் 201415 நிதியாண்டில் பா.ஜ.வுக்கு ரூ.5 கோடி, எம்.கே.சி. இன்ப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் 2018 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு இடையே ரூ.75 லட்சம் கட்சி நிதியாக வழங்கியிருந்தனர்.

டெல்லி - வதோதரா விரைவுச் சாலை திட்டத்தின் மதிப்பு ரூ.32,839 கோடி. கட்டுமானச் செலவு ரூ.11,209.21 கோடி. மேற்கண்ட சாலைத் திட்டத்தில் வழங்கப்பட்ட 31 திட்டப் பணிகளுக்கு சேர்த்து மேற்கண்ட மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த 2019 மே மாதம் முதல் 2020 ஜூன் மாதம் வரை வழங்கப்பட்ட 8 திட்டங்களில் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது. அதாவது டெண்டர் வெளியிடுவதற்கு முன்பு புதிய மதிப்பீட்டுக்கான கட்டணங்கள் இருந்த போதிலும் ஏற்கெனவே நிர்ணயித்த பழைய கட்டணத்தின் அடிப்படையில் இந்த டெண்டர் விடப்பட்டுள்ளது என சி.ஏ.ஜி. தெரிவித்துள்ளது.

மேற்கண்ட 8 திட்ட பணிகளில் 5 பணிகள் ஜி.ஆர். இன்பிரா ப்ராஜெக்ட்ஸ், ஜி.எச்.வி. இந்தியா மற்றும் எல் அண்ட் டி தலா 1 மற்றும் எம்கேசி இன்ப்ராஸ்டிரக்சர் 2 பணிகளை ஏலம் எடுத்துள்ளன. உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கூடிய அளவிற்கு இந்த ஊழல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஒன்றிய அரசின் ஆதரவுடன் மின்துறை, துறைமுகங்களை தொடர்ந்து அடுத்தடுத்து ஒவ்வொரு துறையாக அதானி நிறுவனம் கபளீகரம் செய்து வருகிறது. சமீபத்தில் கூட, மும்பையில் தாராவி குடிசை மேம்பாட்டு திட்டப் பணிகளை ஷிண்டே தலைமையிலான பா.ஜ. கூட்டணி அரசு கொடுத்ததற்கு கடும் எதிர்ப்புகள் நிலவி வருகின்றன.

இதனால்தான், அதானிக்கு மட்டும் விதிகளை மீறி சலுகைகளை அள்ளித்தருவதன் மர்மம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒற்றை விரலை நீட்டி மற்றவர்களை குறை சொல்லத் தொடங்குபவர்கள் தன்னை நோக்கி மற்றவர்கள் நீண்டிருப்பதை மறந்து விடுகிறார்கள் என்ற பொன்மொழி பா.ஜ.வுக்கு முற்றிலும் பொருந்தும் என்று அரசியல் நோக்கர்கள் பலரும் தெரிவிக்கின்றனர். சாதனை என்றால் தங்களுக்கே சொந்தம் என தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஒன்றிய அரசு, குறைகள், பிரச்சினைகள் ஏற்பட்டால் அதன் பழி மொத்தத்தையும் முந்தைய ஆட்சியாளர்கள் மீது போடுவது எந்த விதத்தில் நியாயம்? எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

**தவறான ஆவணங்கள்... தரமற்ற பணி**

ஜி.ஆர். இன்ப்ரா புராஜக்ட் நிறுவனம் பீகார் மாநிலம் கிஷன்கஞ்ச்சில் கட்டிய பாலம் கடந்த ஜூன் மாதம் இடிந்து விழுந்தது. இதன்பிறகு, தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து திட்ட தொகையை பெற்றதாக எழுந்த புகாரை தொடர்ந்து, இந்த நிறுவனத்தில் சி.பி.ஐ. ரெய்டு நடத்தப்பட்டது. இதேபோன்றுதான், ஜி.எச்.வி. இந்தியா நிறுவன மும், நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக வெளியான விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும், விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாகவே, தவறான ஆவணங்களின் அடிப்படையில் டெண்டர் இறுதி செய்யப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டியுள்ளது.

இதுமட்டுமின்றி, கடந்த 2018ல் கே.ஆர்.சி. இன்ப்ரா நிறுவனத்துக்கு குவாலியர் - ஷிவ்புரி நெடுஞ்சாலையில் 4 கி.மீ சாலை அமைக்க ரூ.18.39 கோடி ஒப்பந்தத்தை வழங்கியது தொடர்பாகவும் சி.ஏ.ஜி. விமர்சனம் செய்திருந்தது. மேலும், லக்னோ வட்டச்சாலை திட்டப்பணியில் டெண்டரில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தவறாக இருந்தபோதிலும், திட்டத்தை இந்த நிறுவனத்திடம் நெடுஞ்சாலை ஆணை யம் ஒப்படைத்துள்ளது. இதுபோல், சுராசந்த்பூர் - துய்வாய் திட்டமும் விதிகளுக்கு மாறாக தகுதியற்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என சி.ஏ.ஜி. தெரிவித்துள்ளது. சுராசந்த்பூர் - துய்வாய் மற்றும் சித்தூர் - மல்லாவரம் திட்டங்கள், விரிவான திட்ட அறிக்கை பெறுவதற்கு முன்பாகவே ஒப்படைக்கப்பட்டுள்ளன என சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது.

நன்றி :
**'தினகரன்'**
28,08,2023



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வேப்பங்குடி ஊராட்சி, மேலத்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு உணவு பரிமாறினார். உடன் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, சின்ன முத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் லட்சுமணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ந.கீதா உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பா.ஜ.க. ஆட்சியில் குஜராத் அரசு கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது!

# அதானி நிறுவனத்துக்கு நிலக்கரி வாங்கியதில் கூடுதலாக ரூ.3802 கோடி!

## குஜராத் பா.ஜ.க. அரசு மீது ஆதாரங்களுடன் மாநில காங்கிரஸ் குற்றச்சாட்டு!

அகமதாபாத், ஆக. 30 -

"பா.ஜ.க. ஆட்சியில் குஜராத் அரசு கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது" அதானி நிறுவனத்துக்கு நிலக்கரி வாங்கியதில் கூடுதலாக ரூ.3802 கோடி செலவிடப்பட்டுள்ளது" என குஜராத் பா.ஜ.க. அரசு மீது ஆதாரங்களுடன் மாநில காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அதானிக்குச் சொந்தமான அதானி பவர் முத்ரா லிமிடெட் (ஏ.பி.எம்.யூ.எல்.) நிறுவனத்துக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் எரிசக்திக் கட்டணமாக ரூ.3802 கோடி கூடுதலாக குஜராத் மாநில உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் வழங்கியுள்ளதாக ஆதாரங்களுடன் அம்மாநில எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஆளும் பா.ஜ.க. அரசின் ஆதரவுடன், அப்பட்டமாக நடைபெற்ற லஞ்ச ஊழல் இது என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் சக்திசிங் கோஹில் குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் குஜராத் அரசு நிறுவனமான உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் எழுதிய கடிதம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் எரிசக்தி கட்டணமாக அதிகப்படியாக பெறப்பட்ட தொகை ரூ.3802 கோடியை உடனடியாக திருப்பிச் செலுத்த வேண்டும் என்று அதானி நிறுவனத்துக்கு எழுதப்பட்டுள்ளது.

குஜராத் அரசு நிறுவனத்துக்கும் அதானி நிறுவனத்துக்கும் இடையே மின்சாரம் வாங்குவது தொடர்பாக இரு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு அதன் அடிப்படையில் தரப்பட்ட தொகையில் இந்த கூடுதல் தொகை தரப்பட்டுள்ளது.




மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் கோஹில், சந்தை விலையை விட அதிக விலை கொடுத்து இந்தோனேஷியாவிலிருந்து நிலக்கரி வாங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதில் அதிர்ச்சியூட்டும் செய்தி என்னவெனில், 'நிலக்கரி வாங்குவது தொடர்பான ஆவணங்கள் மற்றும் 'இன்வாய்ஸ்கள்' அனைத்தையும் அதானி நிறுவனத்திடம் குஜராத் உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் கேட்டுள்ளது என்பதுதான்.

சந்தை விலைக்கு தொடர்பின்றி அதிக விலை கொடுத்து தொடர்ந்து அதானி நிறுவனங்கள் சில தேர்வு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் நிலக்கரி வாங்கி வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2018 முதல் 2023 வரையிலான 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.13,802 கோடியை அதானி நிறுவனத்துக்கு, குஜராத் நிறுவனம் அளித்துள்ளது. முறைப்படி எந்தவிதமான ஆவணங்களோ, இன்வாய்ஸ்களோ அளிக்கப்படாத நிலையிலும் இந்தத் தொகை அதானி நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளதாக கோஹில் மேலும் குற்றம் சாட்டுகிறார்.

முறையான ஆவணங்கள் இல்லாமல் இருக்கும் நிலையில் எப்படி பணத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்குவது என்று அதிகாரிகள் தயங்கிய நிலையில் அவர்கள் பணத்தை வழங்க கட்டாயப்படுத்தி இருக்கக்கூடும் என்றும் கோஹில் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

எரிசக்தித்துறை முதலமைச்சர் அலுவலகக் கட்டுப்பாட்டில் இருக்கிறது; எனவே அதானி நிறுவனத்துக்கு பணத்தை வழங்குமாறு முதலமைச்சர் அலுவலகம் கட்டாயப்படுத்தி இருக்கும் என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் சக்தி சிங் கோஹில் குறிப்பிட்டுள்ளார்.

அதானி நிறுவனம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளது என்று குறிப்பிடும் அவர், மற்ற இடங்களில் உடனுக்குடன் சோதனைகள் மேற்கொள்ளும் சி.பி.ஐ.யோ அல்லது இ.டி.யோடு, இந்தப் பிரச்சினையில் உடனடியாக செயல்படாதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அநேகமாக, ஹிண்டுஸ்பர்க் ஆய்வு மையம் இதுகுறித்து வெளிப்படுத்திய பின்னர் குஜராத் அரசு விழித்துக் கொள்ளுமோ என்றுதான் கூறத் தோன்றுகிறது என்று கோஹில் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் கீழ், குஜராத் அரசு, கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது என்று குற்றம்சாட்டும் அவர், அதானிக்கும் குஜராத் அரசுக்கும் இடையேயான இணக்கம் குறித்து நிரூபிக்க தேவையான ஆவணங்கள் அனைத்தும் காங்கிரஸ் கட்சி யிடம் உள்ளன எனவும் தெரிவித்தார்.

மேற்கண்டவாறு 'அகமதாபாத் மிர்ரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

---

### வரலாற்றில் எழுதப்பட வேண்டிய சாதனை

## சமத்துவ சமூகத்தைக் கட்டமைக்கும் காலை உணவுத் திட்டம்!

### 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் புகழாரம்!

சென்னை, ஆக.30-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த பள்ளி மாணவ - மாணவியர்களுக்கான காலை உணவுத் திட்டமானது சமூக சமத்துவத்தை கட்டமைக்கும் விதத்தில் செயல்படுத்தப்படுவதாக 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் தமிழ்நாடு ஆசிரியர் ஆன்டோ டி.ஜோசப் புகழாரம் சூட்டியுள்ளார்.

அது குறித்த விபரம் வருமாறு : -

ஆட்சியில் அமர்ந்த அரசியல் கட்சிகள் பசித்தவர்களுக்கு உணவளிக்க முடிவு செய்யும் போது, எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட மற்றவர்கள் எரிச்சலடைவது இயல்பு. காரணம் மிக எளிதானது. அதாவது, சமூக நலத் திட்டங்கள் பொதுவாக மக்கள் மத்தியில் செல்வாக்கை ஏற்படுத்தி வாக்குகளை பெற்றுத்தரும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன. நிதி முறைகேடு என்ற கூக்குரலை எழுப்புவது, கருவூலத்தின் நிலை மோசமடைந்து வருவது, அதிகரித்து வரும் கடன் சுமை மீது கவனம் செலுத்துவது ஆகியவை எதிர்க்கட்சிகளின் கடமையாகும்.

ஆனால் அரசின் திட்டங்களை 'இலவசம்' அல்லது 'இலவச கலாச்சாரம்' என்று சொல்வதால் இறுதி பயனாளிகளான சாமானிய மக்களின் கோபத்தை அந்த விமர்சனங்கள் பெறுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பணிபுரியும் பெண்களுக்கான மானிய ஸ்கூட்டர் திட்டத்தைத் தொடங்கி வைத்தவருக்கு (அ.தி.மு.க) மற்ற அரசுகள் முன்வைக்கும் சமூக நலத் திட்டங்களை நிராகரிக்க உரிமை உள்ளதா என்ற கேள்விக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை.

இந்த விஷயத்தில் மு.க.ஸ்டாலின் அவர்களது உறுதி தெளிவாக உள்ளது. எந்த மாணவனும் பள்ளிக்கு படிக்க வரும்போது பசியுடன் வரக்கூடாது என்ற அந்த நிலைப்பாடு கட்சியின் கொள்கை வேறுபாடின்றி மக்களின் கருத்துக்களுடன் ஒருங்கிணைந்து எதிரொலிக்கிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மாணவர்களுக்கு மதிய உணவை அறிமுகப்படுத்திய அரசு, புதிய காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, 31,000 பள்ளிகளில் உள்ள 17 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு அதை விரிவுபடுத்தும்போது, அதை யாரால் மறுதலிக்க முடியும்? இது எதிர்காலத்திற்கான முதலீடு ஆகும்.




நாடு முழுவதும் வீட்டு பட்ஜெட்டை பதம் பார்க்கும் வகையில் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ள நிலையில், காலை உணவும், மதிய உணவும் தான் மாணவர்களின் உண்மையான மீட்பர்களாக உள்ளன.

காலை சிற்றுண்டி திட்டம் செயல்பட்டு வரும் நிலையில், கோவையில் உள்ள ஒரு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட சேமியா உப்புமாவில் அதிகமாக தண்ணீர் கலந்திருப்பதாகவும், சரியாக சமைக்கப்படவில்லை என்றும் புகார் வந்தது.

மாணவர்களுக்கு அவ்வாறு சமைக்கப்பட்ட உணவை கொடுத்து ரிஸ்க் எடுக்க தயாரில்லை என்றும், அதன் விளைவாக பள்ளியில் உள்ள 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு நாள் பிஸ்கட் மட்டுமே சாப்பிட வேண்டியதாகி விட்டது என்றும் புகார் கூறப்பட்டது.

அரசின் பல நலத்திட்டங்களால் மாணவர்களின் பள்ளி இடைநிற்றல் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வரும் நிலையில், காலை உணவுத் திட்டம் சுமூகமாக நடைபெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டியது அவசியம். பரிமாறப்படும் உணவுப் பொருட்களின் தரத்தில் உறுதியாக இருப்பதும் அவசியம். ஆரோக்கியமான புதிய தலைமுறையை உருவாக்குவதில் அனைத்து மக்களும் விரும்பக்கூடிய இந்த அரசாங்கம் செயல்படுத்தும் நிகழ்ச்சி நிரல்களில் எல்லாம் முதன்மையானதாக இருக்க வேண்டும்.

மக்கள் நலத் திட்டங்களுக்கான செலவினங்களை சமாளிக்க, கருவூலம் தீர்ந்து விடாமல் சமூக நலத் திட்டங்களுக்கு நிதியளிக்க புதிய வருவாய் வழிகளை அரசு தேட வேண்டியதாக இருக்கும். இந்த நிலையில், இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளிகளும் தங்கள் மாணவர்களுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவை கட்டாயமாக வழங்குகின்றனவா என்பதை சற்று நினைத்துப் பார்க்கவேண்டும்.

இனம் மற்றும் சாதிய பாகுபாடும் இல்லாமல் எல்லா மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து உணவை சாப்பிடுவதையும் நினைத்துப் பாருங்கள்.

1970களில் ஒரு கேரள கிராமத்தில் உள்ள ஒரு அரசு நடுநிலைப் பள்ளியில் எனது வகுப்புத் தோழர்களுடன் மதிய உணவுக்கு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையால் தயாரிக்கப்பட்ட உப்புமாவை சாப்பிட்ட எனது பள்ளி நாட்களை நினைவில் கொள்கிறேன்.

மு.க.ஸ்டாலின் அரசு தொடங்கியுள்ள காலை உணவுத் திட்டம் ஒரு புதிய விடியலாக அமையட்டும். அது சமூக சமநீதியை, சமத்துவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு புதிய பாதை என்று கூறுவது எந்த வகையிலும் சற்றும் மிகையல்ல.

இவ்வாறு 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் செய்தி வெளியாகியுள்ளது.

---

### கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு!

## இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவரின் வழியில் அயராது உழைப்போம்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக, 30 -

கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டங்களை, செயல்படுத்தும் கழகத் தலைவரின் வழியில்" இந்தியாவிற்கு விடியலை ஏற்படுத்த அயராது உழைப்போம்" என குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து அவரது ட்விட்டர் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் ஒற்றை நம்பிக்கையாம் நம் தி.மு.கழகத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் @mkstalin அவர்கள் பொறுப்பேற்று இன்றுடன் 5 ஆண்டுகளை நிறைவு செய்து ஆறாம் ஆண்டில் நம்மையெல்லாம் வழிநடத்தவுள்ளார்கள்.**

**அரை நூற்றாண்டு காலம் இயக்கத்தை கட்டிக்காத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழி நின்று கழகத்தின் கொள்கையாலும், ஆட்சியில் செயல்படுத்தும் திட்டங்களாலும் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டி வருகிறார் நம் கழகத்தலைவர் அவர்கள்.**

**2019 நாடாளுமன்றத் தேர்தல் - 2021 சட்டமன்றத் தேர்தல் - உள்ளாட்சித் தேர்தல் என களம் கண்ட அத்தனை தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடிய கழகத் தலைவரின் வழிகாட்டுதலோடு 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாசிஸ்ட்டுகளை வீழ்த்தி இந்தியாவுக்கு விடியலை ஏற்படுத்த அயராது உழைப்போம்.**

இவ்வாறு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

---

### அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான

## தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு!

சென்னை, ஆக. 30-

அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் ஆகமம் சம்பந்தப்பட்ட பணியாளர்களை நியமிக்க தடை விதிக்கக் கோரி ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச்சங்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு இந்து சமய நிறுவன ஊழியர்களுக்கான சேவை விதிகள், 2020ன் கீழ் கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட்ட அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டது. அந்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து ஆதிசைவசிவாச்சாரியார்கள் நலச்சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு, நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், ஜெ.பி. பர்திவாலா அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என கோரப்பட்டது.

ஆனால், இதனை ஏற்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர். மேலும், இந்த மனு தொடர்பாக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை பதில் மனு தாக்கல் செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



பட்டுக்கோட்டை கொண்டிக்குளத்தில், தி.மு.கழக மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வத்தின் மகள் மருத்துவர் அனுஷ்யா – மருத்துவர் எஸ்.விக்னேஸ்வரன் இணையரின் திருமணத்தை கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்தார். மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக அலுவலகத்தில், சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டிற்கான கவுண்ட் டவுனை தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், மாவட்ட கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகரச் செயலாளரும், மாநகராட்சி மண்டல குழு தலைவருமான மு.மதிவாணன், துணை மேயர் திவ்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்த் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் முத்து தீபக், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், பென்னார்டு சாமிநாதன், ரவீந்திரன், தேசிங்குராஜா, விஷ்ணுவர்தன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, அல்லாபிச்சை, கண்ணன் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முரசொலி பாசறை



# திராவிடப் போராளிகள்

**32**

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

■ வழக்கறிஞர் அருள்மொழி

"ஏ! சகோதரர்களே! நாங்கள் துஷ்ட மிருகங்களல்ல; எங்களுக்காக நீங்கள் அஞ்ச வேண்டாம். நாங்களும் உங்களைப்போல் மனிதர்கள்தான். நாங்கள் உங்களுக்குத் தீங்கிழைக்க முற்படோம். உங்களுடைய சுதந்திரத்தைக் கொள்ளை கொள்ளோம்! உங்கள் சகோதரிகளாகிய எங்களின் பரிதாபத்தை மிஸ் மேயோ எடுத்தறிவித்தவைகள் உங்களின் நெஞ்சத்தில் பதியவில்லையா? உங்களுடன் பிறந்த நாங்கள் உங்களுக்கு இன்னும் எத்தனை வருஷம் அடிமைப்பட்டிருப்பது? இனிமேலாகிலும் எம்மீது இரக்கங்கொண்டு எமது வர்க்கத்தினர்களாகிய பெண்களின் விடுதலைக்கு உழைக்க முன் வருவீர்களாகில் உங்களுக்கு விடுதலை தானாகவே கிட்டும்!" - என்று ஆண்கள் விடுதலைக்கும் வழிகாட்டும் சிந்தனையை, -7.10.1928 'குடிஅரசு' இதழில் 'எமது விடுதலைக்கு இறங்காததேனோ!' என்ற தலைப்பில் எழுதினார் பினாங்கு ஸ்ரீமதி ஜானகி அம்மாள்.

## மிஸ் மேயோ கண்ட இந்தியா

அதே கட்டுரையில் பழம் பெருமை பற்றி, "மிஸ் மேயோ நம் நாட்டினர்களை ஏதோ குறை கூறிவிட்டதாகக் கருதி எமது நாடு கண்ணகி பிறந்த நாடு, மாதவி பிறந்த நாடு, வள்ளி பிறந்த நாடு! சாவித்திரி பிறந்தநாடு! இன்னும் எத்தனையோ. பதிவிரதா சிரோன்மணிகள் பிறந்த நன்நாடு!" என்றும் இந்நாட்டை குறைகூறி விட்டாள் என்றும் கூக்குரல் போட மட்டிலும் அனேக வைதீக வீரர்கள் கிளம்பி விட்டார்கள்......" என்று எழுதினார்.

பினாங்கு ஜானகி அம்மாளின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள மிஸ் மேயோ என்பவர் ஒரு அமெரிக்கப் பெண்மணி. அவர் 1927-ஆம் ஆண்டு 'மதர் இந்தியா' என்ற நூலை வெளியிட்டார். அந்த நூலில், தான் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது கண்ட அதிர்ச்சியூட்டும் மூடத்தனங்களையும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட இரக்கமற்ற கொடுமைகளையும், தான் கண்டவாறே பதிவு செய்துவிட்டார்.

'இவள் யார் இதை எழுதுவதற்கு' இந்தியாவில் நல்லவைகளே நடக்கவில்லையா...? என்ற கேள்விகளைத்தான் காந்தியார் முதல் கடைசித் தேசியவாதிவரை கேட்டுக் கொண்டிருந்தார்கள். தந்தை பெரியார் மட்டும்தான் 'மேயோ கூற்று மெய்தானே, அவர் கூறிய கொடுமைகளை வைதீகத்தின் பெயரால் செய்து கொண்டுதானே இருக்கிறீர்கள். அதற்குத் தீர்வு எங்கே?' என்று கேட்டார். பினாங்கு ஜானகியோ தன் ஒவ்வொரு கட்டுரையிலும் மிஸ் மேயோவைக் குறிப்பிட்டார்.



ஓவியம் : ரவி பேலட்

# பினாங்கின் கொள்கைக் கோமகள் ஜானகி அம்மையார்

## சாதியை எதிர்த்த சுயசிந்தனை

ஒரு சிறிய கட்டுரையில், தீப்பொறிகளாய்த் தெறித்து விழும் எண்ணற்ற கருத்துகள் எழுதிய பினாங்கு ஜானகி அம்மாள் யார்?

தஞ்சையைப் பூர்வீகமாகக் கொண்டு மலேசிய நாட்டின் பினாங்கு மாநிலத்தில் வணிகம் செய்த கலியபெருமாள் என்பவரின் மகள்தான் ஜானகி. பெண்களுக்குக் கல்வி அவசியம் என்ற சிந்தனை கொண்டவரான கலியபெருமாள், தன் மகள் ஜானகியைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

பள்ளிப் படிப்பும் சுயசிந்தனையும் ஜானகியின் மனதில் சுயமரியாதையை விதைத்தன. சமூகக் கேடுகளைப் பற்றியும், பெண்ணடிமைக் கொடுமைகளைப் பற்றியும், அதற்கு சாதியும் மதமும் நாடும் பண்பாடும் எப்படிக் காரணமாகின்றன என்றும் உணர்ந்த ஜானகி அம்மையாரை சுயமரியாதை இயக்கமும் 'குடிஅரசு' ஏடும் ஈர்த்ததில் வியப்பில்லை.

## தடைகளை உடைத்த காதல்

இப்படி ஓர் அறிவும் தெளிவும் துணிவும் கொண்ட ஜானகி மீது சுயமரியாதைக்காரரான அப்பாவு காதல் கொண்டார். ஆனால், சாதி எனும் நெடுஞ்சுவர் குறுக்கே இருந்தது. ஜானகியின் தந்தை ஒரு வைதீக சமூகத்தவர். பண்டிதர் அப்பாவு மருத்துவர் சமூகத்தவர். சாதி உருவாக்கிய தடைகளை அப்பாவு பண்டிதர் எழுதிய காதல் கடிதங்கள் உடைத்துவிட்டன.

எதிர்ப்புகளை மீறி நடந்த அவர்களது சுயமரியாதைத் திருமணத்தை டாக்டர் கே.என். மேனன் முன்னிலையில் நடத்தி வைத்தவர் ஈப்போ இந்து மகாசன சங்க காரியதரிசியான அய்யாரு அவர்கள்.

17.2.1929 'குடிஅரசு' இதழில் சுயமரியாதைத் திருமணம் என்ற தலைப்பில் பினாங்கு ஜானகியின் திருமணச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

"மணமேடை மீது ஸ்ரீமதி நாயக்கரின் திரு உருவப்படம் மலர் மாலையால் அலங்கரிக்கப்பட்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் பாவனையாய் மணமேடை மீது தொங்கவிடப்பட்டிருந்தது. மணமக்கள் சுதேசி உடையுடன் துலங்கினர்.

திருமணத்தில் 12 வயதுள்ள மகாலிங்கம் என்னும் சிறுவன் இனிய சாரீரத்துடன்,

'வாழ்க வைக்கம் வீரன் வாழ்க வாழ்க
வாழ்கவே!
வாழ்க! வைதீகம் வீழ்க வீழ்கவே!
எட்டுத்திக்கும் தன்மதிப்பு பற்றி எழுகவே!
ஏழை மக்களைக் கெடுக்கும் வேதம் ஒழியவே!
நாட்டுப் பெண்கள் பட்ட துன்பம்
ஓட்டமெடுக்கவே!
நயவஞ்சகக்காரப் பார்ப்பான் நைந்து சாகவே!'

என்ற வாழ்த்துப் பாடலைப் பாடினான்.

'மருத்துவனுக்கு' ரூ.5-ம் குடிஅரசுக்கு ரூ. 3-ம், திராவிடனுக்கு ரூ. 3-ம் நன்கொடை அளிக்கப்பட்டன".

## ஜானகி எங்கே?

1929-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் தேதி தந்தை பெரியார், மலேயா (மலேசியா) நாட்டின் ஈப்போ நகரில் நடைபெற்ற தமிழர் சீர்திருத்த சங்க மாநாட்டுக்குச் சிறப்புரை ஆற்றச் சென்றிருந்தார். அவருடன் நாகம்மையார், எஸ்.ராமநாதன், அ.பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார், சி.நடராஜன் ஆகிய தோழர்களும் சென்றனர். அவரை வரவேற்க சுமார் 50 ஆயிரம் தமிழர்கள் பினாங்கில் கூடினர். ஆனால், தந்தை பெரியாரும் அன்னை நாகம்மையாரும் 'ஜானகி அம்மாள் எங்கே?' என்று கேட்டார்கள்.

அவர் பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன், 'சரி, கவலைப்பட வேண்டாம்; நாங்கள் சிங்கப்பூர் பயணம் முடித்து வந்து பார்க்கிறோம்' என்று கூறிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள். அதேபோல் அவர்கள் திரும்பி வருவதற்குள் ஜானகி அம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது. அந்தக் குழந்தைக்கு 'சமரசம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

**சிறப்பான பிரச்சாரப் பயணத்தின் கடைசி நாளில் ஜானகி அம்மாள் குழந்தையுடன் விழாவுக்கு வந்துவிட்டார்.**

எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையில் நடந்த சிறப்பான பிரச்சாரப் பயணத்தின் கடைசி நாளில் ஜானகி அம்மாள் குழந்தையுடன் விழாவுக்கு வந்துவிட்டார்.


பண்டிதர் அப்பாவு - ஜானகி அம்மாள் இருவருக்கும் ஒரு மகள், மூன்று மகன்கள் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர். மூத்த மகன் பெயர் சமரசம், அடுத்த மகள் பெயர் சமதர்மம், மூன்றாவது மகன் பெயர் ராஜாராம் மோகன்ராய், கடைசி மகன் பெயர் சன்யாட் சென்.

இப்படிக் கொள்கைப் பெயர்களை வைத்ததாலும் சில பிரச்சினைகளை ஜானகியும் அப்பாவு பண்டிதரும் எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

(வருவார்கள்...)

---

## சென்னை என்கிற தலைநகரம்!




அரசியல், பொருளாதாரத்தில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடுதான் இந்தியாவுக்கே முன்னோடியாக இருக்கிறது, என்பதை செஸ் விளையாட்டுப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையில், புதிய உத்வேகத்துடன் கவனம் செலுத்தி வரும் நிலையில், செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தி சர்வதேச அளவிலும் கவனத்தை ஈர்த்தது.

நமது விஸ்வநாதன் ஆனந்த் உலக அளவில் சாம்பியனாக விளங்கியவர். தவிர, இந்திய அளவில் 25-க்கும் மேற்பட்ட கிராண்ட் மாஸ்டர்கள் தமிழ்நாட்டில் உருவாகி உள்ளனர்.

இந்தியாவில் சுமார் 65 கிராண்ட் மாஸ்டர்கள் என்றால், அதில் மூன்றில் ஒரு பங்கு சாதனையாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரக்ஞானந்தா செஸ் சாம்பியன் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்றதன் மூலம் தமிழ்நாட்டில் செஸ் விளையாட்டில் மேலும் ஒரு அலை உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம் மட்டுமல்ல, பல துறைகளுக்கான தலைநகரங்களின் பட்டியலில் செஸ் விளையாட்டும் சேர்ந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### வரைபடமும் புகைப்படமும்!

கழகம் தேர்தலில் வென்று, தலைவர் கலைஞர் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற 1989-ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்கள், எங்கள் பகுதிக்குக் கொடியேற்றி வைக்க வருகை தந்திருந்தார். எங்கள் பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் தளபதி கொடியேற்றி வைத்தார்.



அண்ணாத்துரை

அப்போது வல்லம் பேரூரின் திட்ட வரைபடத்தையும் திறந்து வைத்து அவர் சிறப்புரையாற்றினார். அச்சமயத்தில் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. முன்னாள் ஒன்றிய தலைவர் இர.கோபாலகிருஷ்ணன், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம் மற்றும் காயிதே மில்லத் ஆகியோர் உடனுள்ளனர்.

**-த.அண்ணாத்துரை,**
**பேரூர் இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், வல்லம் பேரூர் கழகம், தஞ்சாவூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### கண்டிப்பான தலைவர்!

**1969-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராக ஆனபோது, 'ஸ்டேட்ஸ்மேன்' ஆங்கிலப் பத்திரிகை எழுதியது "கலைஞரை சட்டசபைக் கட்சித் தலைவராகத் தேர்தெடுத்ததன் மூலம், தி.மு.கழகம் ஒரு பலசாலிக்குப் பின்னால் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டுமென்பதில் உள்ள அக்கறையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. கண்டிப்புக்கும், கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கும் பெயர் பெற்றவர். ஒரு மகத்தான தலைவரை இழந்து நிற்கும் இந்த நேரத்தில், மிகச் சோதனையான நேரத்தில், அக்கட்சிக்கு இத்தகையத் தலைவர் தேவையானதே என்று டெல்லி வட்டாரத்தில் உணரப்படுகிறது" எனக் கலைஞரைப் புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**225**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131